வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 14.03.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 75 பக்கங்கள் : 12

# தமிழ் அரசுக் கட்சியை பிளவுபடுத்துவதற்கு சதி

## சீ. வீ. கே. சிவஞானம் சாடல்



யாழ்ப்பாணம், மார்ச் 14

**இலங்கை தமிழ் அரசு கட்சியை பிளவுபடுத்த சதி நடப்பதாக அந்தக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.**

**நேற்று வியாழக்கிழமை நல்லூரில் நடத்திய செய்தியாளர் சந்திப்பி லேயே இதனை அவர் தெரிவித்தார்.**

"தமிழ் அரசுக் கட்சிக்கு எதிராக பல்வேறு சதிவலைகள் பின்னப்படுகின்றன. அதிலும் தமிழ் அரசுக் கட்சியை எப்படியாவது சிதைத்து - உடைத்து - கட்சியை பிளவுபடுத்தி விட வேண்டுமென சிலர் செயல்படுகின்றனர். இந்த அடிப்படையில் புதிய தமிழ் அரசு கட்சி உருவாக்கம் குறித்து பேசப்படுகிறது. உண்மையில் அப்படியாக கட்சிக்குள் இருப்பவர்கள் யாரும் கருதவில்லை. அப்படியான எண்ணங் கள்கூட அவர்களிடத்தே இல்லை. ஏனெனில் கட்சியில் பலருடனும் இது தொடர்பில் பேசியபோது அவர்கள் அனைவரும் இதனை 11

## பிரபல குற்றவாளிகளின் பட்டியலில் வன்புணர்வு சந்தேகநபரின் பெயர்!

கொழும்பு, மார்ச் 14

அநுராதபுரம் பெண் மருத்துவர் வன்புணர்வு குற்றச்சாட்டில் கைதான சந்தேகநபரின் பெயர் ஏற்கனவே பிரபல குற்றவாளிகளின் பட்டியலில் உள்ளது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கைதான சந்தேகநபர் ஐஸ் போதைப் பொருளுக்கு அடிமையானவர் என்றும் கூறப்படுகிறது.

மேலும், மருத்துவரை கத்தி முனையில் அச்சுறுத்தி பொருட்களை கொள்ளையிடும் நோக்கிலேயே அறைக்குக் கூட்டிச் சென்றார் என்றும் மருத்துவர் மட்டுமே தனித்து இருந்த சந்தர்ப்பத்தைப் 11

## உள்ளூராட்சி தேர்தலில் நாம் தனித்தே போட்டி!

### தமிழ் மக்கள் கூட்டணி அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 14

எமது தனித்துவத்தை இல்லாமலாக்கும் முயற்சியில் பிற கட்சிகள் செயல்பட்டன. இதனால், நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் எமது கூட்சி தனித்துப் போட்டியிடும் - என்று தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுச் செயலாளர் க. வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எவ்வாறாயினும், தேர்தல் முடிவடைந்த பின்னர் எந்தக் கட்சியுடன் இணைவது என்பது தொடர்பில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும் - என்றும் அவர் கூறினார். (ஐ)

## மருத்துவர்களின் புறக்கணிப்பு நேற்றுடன் நிறைவுக்கு வந்தது!

கொழும்பு, மார்ச் 14

நாடு முழுவதும் மருத்துவர்கள் முன்னெடுத்த பணிப் புறக்கணிப்புப் போராட்டம் நேற்று வியாழக்கிழமை காலை முதல் நிறைவுக்கு வந்தது.

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் பெண் மருத்துவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமையை கண்டித்தும் - அவருக்கு நீதி கோரியும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்திருந்தது. 11

பெண் மருத்துவர் வன்புணர்வு:

## குற்றச் சந்தேகநபருக்கு இரு நாள் தடுப்பு காவல்!

கொழும்பு, மார்ச் 14

பெண் மருத்துவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தில் கைதான சந்தேகநபரை 48 மணி நேரம் தடுப்பு காவலில் வைத்து விசாரிக்க அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

34 வயது குற்ற சந்தேகநபரான படை விட்டோடி சிப்பாய் நேற்றைய தினம் அநுராதபுரம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோதே இந்த இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதனிடையே, சந்தேகநபரின் சகோதரி உட்பட இருவர் நேற்றுமுன்தினம் அநுராதபுரம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## 50,000 புரோஸ்மைட் ஊசிகளை அன்பளிப்பாக வழங்கிய இந்தியா



கொழும்பு, மார்ச் 14

அரசாங்கத்தின் அவசர கோரிக்கையை ஏற்று மருத்துவமனைகளில் நிலவும் பற்றாக்குறையை பூர்த்தி செய்வதற்காக இந்திய அரசாங்கம் 50 ஆயிரம் புரோஸ்மைட் ஊசி மருந்துகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

நாள்பட்ட இதய நோயாளிகளுக்கான புரோஸ்மைட் ஊசி மருந்துகளை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா நேற்றைய தினம் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் வழங்கி வைத்தார்.

கோவிட் 19 பரவியபோது 2020 மே மாதம் 25 தொன்னுக்கும் அதிகமான மருந்துகளை 11

## அ'புரம் பெண் மருத்துவரின் வாக்குமூலம் வெளியானது!

கொழும்பு, மார்ச் 14

அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்ட பெண் மருத்துவரின் வாக்குமூலத்தை பொலிஸார் நேற்று நீதிவான் நீதிமன்றில் சமர்ப்பித்துள்ளனர்.

அந்த வாக்குமூலத்தில் அவர் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு,

"நான் 10 ஆம் திகதி பிற்பகல் 3:30 மணி வரை பணியாற்றினேன். என் சேவையை 11

## சிறைச்சாலை முன்னாள் அதிகாரி சுட்டுக்கொலை!

கொழும்பு, மார்ச் 14

சிறைச்சாலையின் முன்னாள் அதிகாரி ஒருவர் அவரின் வீட்டில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காலி - அக்மீமன - தலகஹ பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே அவரை சுட்டுக் கொன்றனர். இந்தக் கொலைக்கு 9 மி. மீ. துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

கொலையானவர் 61 வயதுடையவராவார். இவர் முன்னர் பூஸா சிறைச்சாலையில் 11

## 22 ஆயிரத்து 450 நிறுவனங்கள் ஊ. பி. எவ். செலுத்துவதில்லை!

கொ ழும்பு, மார்ச் 14

ஊழியர் சேமலாப நிதியத்தை (ஊ. பி. எவ்.) உரிய வகையில் வழங்காத 22 ஆயிரத்து 450 அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலைவர்களுடன் கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க தெரிவித்துள்ளார். (ஐ)

## 2029 ஜனாதிபதி தேர்தல் மூலம் மீண்டும் ஆட்சியை பிடிப்போம்!

### சிறீ லங்கா பொதுஜன பெரமுன

கொழும்பு, மார்ச் 14

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 2018ஆம் ஆண்டு வெற்றி பெற்றதைப் போன்று அமோக வெற்றி பெறுவோம். 2029ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவே அதிகாரத்தை கைப்பற்றும் - இவ்வாறு அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். 11

## கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா இன்று!

யாழ்ப்பாணம், மார்ச் 14

கச்சதீவு அந்தோனியார் ஆலய திருவிழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து, சிலுவைப் பாதை திருப்பலி பூசையும் இரவு அந்தோனியாரின் தேர் பவனியும் நடைபெறும். திருவிழாவின் இரண்டாவது நாளான நாளை சனிக்கிழமை காலை 7 மணியளவில் திருப்பலி பூசைகள் தமிழ், சிங்கள மொழிகளில் 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண் அழுத்த நோய் அறிகுறிகள் இல்லாமல் பார்வையை பறிக்கும்

## மருத்துவர் சந்திரகுமார்




யாழ்ப்பாணம், மார்ச் 14

கண் அழுத்த நோயானது (குளுக்கோமா) அறிகுறிகள் இல்லாமல் படிப்படியாக கண் பார்வையை இழக்க செய்யும். கண்களை பரீட்சித்துப் பார்ப்பதன் மூலம்தான் இந்த நோயை கண்டறியலாம் என்று கண் மருத்துவ நிபுணர் சர்வானந்தம் சந்திரகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கண் அழுத்த நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வின் பின்னர் அவர் ஆற்றிய உரையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், இந்த நோயை சரியான நேரத்தில் கண்டுபிடிப்பதன் மூலம் மருந்துகள் அல்லது லேசர் சிகிச்சை அல்லது சத்திர சிகிச்சை மூலம் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவர முடியும். ஆனால், அநேகமாக சிகிச்சைக்கு வருபவர்கள் குறித்த நோய் முற்றிய பின்னரே சிகிச்சைக்கு வருகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அதனை நாங்கள் கட்டுப்படுத்துவது கடினமான விடயம்.

இந்த நோயானது சிறிது சிறிதாக கண்ணில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் உணர்வது கடினம். பார்வைப் புலமானது சிறுத்துக்கொண்டு செல்லும். நடப்பதுகூட கஷ்டமாக இருக்கும். இது ஓர் அறிகுறி இல்லாத நோய் என்பதால் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் கண் அழுத்தத்தைப் பார்த்து, கண் பின்புறத்தை பரிசோதிப்பதன் மூலம் இந்த குளுக்கோமா நோயை கட்டுப்படுத்த முடியும் - என்றார்.

(ஐ-05)

# மிளகாய்த்தூளை வீசி சங்கிலி பறித்தவர் கைது!

முல்லைத்தீவு, மார்ச் 14

வீட்டில் இருந்தவரின் முகத்தில் மிளகாய்த்தூளை வீசிவிட்டு தங்கச் சங்கிலியை பறித்துச் சென்ற சந்தேகநபரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

புதுக்குடியிருப்பு - வேணாவில் பகுதியில் கடந்த 8ஆம் திகதி அதிகாலை 2.30 மணியளவில் வீடொன்றுக்குள் நுழைந்தவர் அங்கிருந்தவரின் முகத்தில் மிளகாய்த்தூளை வீசிவிட்டு அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை அபகரித்துச் சென்றுள்ளார்.

6 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தங்கச்சங்கலியே இவ்வாறு அபகரிக்கப்பட்டது. இது தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸில் பாதிக்கப்பட்டவர் முறைப்பாடு கொடுத்தார்.

இது தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு பகுதியில் வைத்து சந்தேகநபரை கைது செய்தனர்.

இந்தக் கைது நடவடிக்கையில் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். பி. ஆர். ஹேரத் தலைமையிலான குழு ஈடுபட்டிருந்தது.

கைதானவர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றின் உத்தரவின்பேரில் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# பெண்களுக்கு எதிரான வன்முறை; யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 14

பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிராக கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

வல்லமை சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் பௌர்ணமி நாள் செயல்பாட்டுத் தொடர்ச்சியாக "பெண்களுக்கு எதிரான அனைத்து சுரண்டல்களையும் முடிவுக்கு கொண்டுவர மௌனத்தை கலைப்போம்", எனும் தொனிப் பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பமான இந்த கவனவீர்ப்புப் போராட்ட பேரணி தந்தை செல்வா கலையரங்கு வரை சென்று மகஜர் கையளிப்புடன் நிறைவடைந்தது.

(ஐ)

# புதிய கடற்றொழில் சட்டமூலம் வேண்டாம்!

## வடக்கு கடற்றொழிலாளர் இணையம்

வடமராட்சி, மார்ச் 14

"1996ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கடற்றொழில் சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள். புதிய சட்ட மூலத்தை நாம் எதிர்க்கிறோம்.", இவ்வாறு வடமாகாண கடற்றொ ழிலாளர் இணைய பிரதிநிதி நா. வர்ணகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடமராட்சி ஊடக இல்லத்தில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

மேலும், கடந்த காலத்தில் கொண்டுவரப்பட்ட கடற்றொழில் தொடர்பான புதிய சட்டமூல வரைவை தற்போதைய அரசு சட்டமூலமாக்க முனைகிறது.

கடந்த அரசின் காலத்தில் அப்போதைய அமைச்சர் குறித்த புதிய சட்ட மூல வரைவை கடற்றொழிலாளர் சங்க அங்கத்தவர்களை அழைத்துத் பிரதிகளை வழங்கினார். ஆனால், அந்தபிரதியில் நடுப்பகுதி அச்சிடப்படாமல் விநியோகிக்கப்பட்டது. அப்போதே மீனவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இப்போது அந்தப் புதிய சட்டத்தை அரசு நடைமுறைப்படுத்த முனைகிறது. 1996ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட கடற்றொழில் சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள். புதிய சட்ட மூலத்தை நாம் எதிர்க்கிறோம். குறித்த சட்ட மூல பிரிதிகளில் என்ன இருக்கிறது என்று இதுவரை மீனவர்களுக்கு தெரியாது.

ஐரோப்பிய நாட்டுப் பிரதிநிதிகளை கூப்பிட்டு கடல்வளத்தை கூறு போட்டு குத்தகைக்கு குடுக்கிற சூழ்ச்சிகளை புதிய அரசும் முன்னெடுக்கிறது. எமது கடலை சீனாவுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் தாரைவார்க்க முனைகிறது.

இதுவரைக்கும் கடற்றொழில் சங்கம், சமாசம், சம்மேளனம் புனரமைக்கப்படவில்லை. இதனை புனரமைக்க அமைச்சரால் முடியவில்லை. எமது கடலில் உள்ளூர் இழுவைப் படகுகள், சட்டவிரோத கடற்றொழில்கள் இடம்பெற்ற வண்ணமே உள்ளது. இதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

(ஐ)

# மகா கும்பாபிஷேகம்

வடமராட்சி, மார்ச் 14

வடமராட்சி தென்புலோலியூர் அருள்மிகு உபயகதிர்காம ஆலய தான்தோன்றிய சிறீ சக்கர சண்முக தேவஸ்தான புனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஷ்ட மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 19ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

முன்னதாக எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை காலை முதல் கிரியைகள் நடைபெற்று மறுநாய் செவ்வாய்க்கிழமை காலை 8:30 மணி முதல் மாலை 4.00 மணி வரை எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும். அடுத்தநாள் 19ஆம் திகதி புதன்கிழமை காலை 9.39 மணி முதல் 11. 38 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. (ஐ-02)

# முல்லைத்தீவில் கசிப்பு காய்ச்சிய இரு இளைஞர்களுக்கு மறியல்

முல்லைத்தீவு, மார்ச் 14

புதுக்குடியிருப்பில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இளைஞர்கள் இருவரை விளக்கமறியலில் வைக்க முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு - அச்சலங்குளம் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாகப் புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு நேற்று முன்தினம் தகவல் கிடைத்தது.

இதையடுத்து, பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைதானவர்கள் 22, 19 வயதுடையவர்களாவர்.

சந்தேகநபர்களிடமிருந்து 418 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்பு மற்றும் 4 பீப்பாய்கள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதான சந்தேகநபர்களை எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

(ஐ)

# ஐஸ் போதைப்பொருளுடன் கிளிநொச்சியில் ஒருவர் கைது

கிளிநொச்சி, மார்ச் 14

கெப் ரக வாகனத்தில் ஐஸ் போதைப் பொருளை கொண்டு சென்றவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைவாக கிளிநொச்சி - தருமபுரம் - ஏ-35 வீதியில் பயணித்த கெப் ரக வாகனம் சோதனையிடப்பட்டது.

இதன்போது, 5 கிராம் 720 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

இதையடுத்து சந்தேகநபரை கைது செய்த விசேட அதிரடிப் படையினர் சட்ட நடவடிக்கைகளுக்காக அவரை தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)





யாழ்ப்பாணம் - கன்னாதிட்டி காளி அம்பாள் ஆலய தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் புதன்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றன. (படங்கள்: ஐ.சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
14.03.2025 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மாசி 30

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரணில் இலக்கு வைக்கப்பட்டாரா?

அறகலய போராட்டத்தை அமெரிக்கா விரும்பியதுபோல் முன்னெடுப்பதை தடுத்தமையால்தான் ரணில் விக்கிரமசிங்க இலக்கு வைக்கப்படுகிறார் என்று கோட்டாபய ஆதரவு அரசியல்வாதி உதய கம்மன்பில தெரிவித்திருக்கிறார். இலங்கையில் எது நடந்தாலும் அதனை சதிக்கோட்பாடுகளோடு தொடர்புபடுத்துவது ஓர் அரசியல் நோயாகவே இருக்கிறது. இதில் சிங்கள அரசியல் சூழல், தமிழ் அரசியல் சூழல் என்னும் பாகுபாடுகள் இல்லை. வடக்கில் ஓர் அரசியல்வாதி வீதியில் தடுக்கி விழுந்தாலும் அதற்கு பின்னால் வெளியக உளவுச் சதி இருப்பதாகக் கூறுமளவு நிலைமை இருக்கிறது.

இந்தப் பின்புலத்தில் ரணில் விக்கிரமசிங்க அல்ஜசீரா ஊடகத்துக்கு வழங்கிய நேர்காணலைத் தொடர்ந்து ரணில் திட்டமிட்டு இலக்கு வைக்கப்பட்டதான பார்வையொன்றை தென்னிலங்கையில் ரணிலின் ஆதரவாளர்கள் கூறமுற்பட்டனர் - அதனை தற்போது கோட்டாபய ஆதரவுத் தரப்பினரும் கூறுகின்றனர்.

ரணில் தன்னுடைய அரசியல் அனுபவத்திலும் வித்துவத்திலும் செருக்குக் கொண்டே அந்த நேர்காணலை எதிர்கொள்ள முற்பட்டார். ஒரு கட்டத்தில் தடுமாறி, “நீங்கள் பிறப்பதற்கு முன்பிருந்தே அரசியலில் இருக்கிறேன்”, என்றும் கூறுகிறார். ஆனால், நேர் கண்டவர் துறைசார் அனுபவம்மிக்கவர், பல விவாதங்களில் களம் கண்டவர் - இதனால் ரணில் சிக்குப்பட்டு விட்டார். அதிலும், ரணிலின் பக்கத்தில் வாதிடுவதற்கு விடயங்கள் இருக்கவில்லை - காரணம் இலங்கைத் தீவில் ரணிலின் காலத்தில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய மாற்றங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

ரணில் ஜனாதிபதியாக வந்த பின்னர் மேற்குலக ஊடகங்களில் நேர்காணல்களை வழங்கியிருக்கிறார். இதற்கு முன்னரும் நேர் கண்டவர் மீது கோபப்பட்டு சத்தமிட்டிருக்கிறார். விடயங்களை எதிர்கொள்ள முடியாமல் போகின்றபோது, “நீங்கள் பிறப்பதற்கு முன்னரே அரசியலில் இருப்பவர்”, என்று கதைவிடும் பழக்கம் ரணிலிடம் உண்டு. ஆனால், அது இம்முறை எடுபடவில்லை.

ரணில் மேற்கு சார்பானவர். குறிப்பாக, அமெரிக்க ஆதரவாளர் என்னும் பார்வை பழையது. அது முன்னரைப் போன்று இப்போதும் பெறுமதியுடையதாக இருப்பதாகக் கூறமுடியாது. ரணிலின் கருத்துகளும் இப்போது அவ்வாறு இருப்பதாகக் கூறமுடியாது. நல்லாட்சி காலத்தில்தான், ரணில் விக்கிரமசிங்க அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு சீனாவுக்கு வழங்கியிருந்தார். ரணிலின் இந்தத் தீர்மானம் இந்திய மட்டத்தில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. அமெரிக்காவையும் சங்கடப்படுத்தியது. சீனாவின் கடன் பொறி இராஜதந்திரத்துக்கான ஒரு குறியீடாகவே அம்பாந்தோட்டை விவகாரத்தை அமெரிக்க ஊடகங்கள் வர்ணித்து வருகின்றன.

ரணில் விக்கிரமசிங்க தென்னிலங்கையைப் பொறுத்தவரையில் ஒரு முதன்மையான அரசியல்வாதியாக நோக்கப்படும் நிலையில் இல்லை - காரணம் அவருக்கு மக்கள் செல்வாக்கு இல்லை. ரணில் என்னதான் தன்னைப் பற்றிய அரசியல் விம்பத்தை காண்பித்தாலும்கூட, அவரால் சாதாரண சிங்கள மக்களின் ஆதரவை கவர முடியவில்லை. இந்த நிலையில் ரணில் விக்கிரமசிங்கவை திட்டமிட்டு பலவீனப்படுத்தும் தேவை எவருக்கும் இல்லை. தவிர, இலங்கையை மேற்குலகம் உற்றுநோக்கிக் கொண்டிருக்கவுமில்லை. தவிர, ரணிலை நேர்கண்ட ஊடகம் அப்படியொன்றும் அமெரிக்க ஆதரவு ஊடகமும் அல்ல.

# வன்னியில் அதிக கால்நடைகள் ஆனால், மேய்ச்சல் தரவை இல்லை!

### நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

*கொழும்பு, மார்ச் 14*

வன்னியில் ஏறக்குறைய 3 இலட்சத்து 70 ஆயிரம் கால்நடைகள் காணப்படுகின்றபோதிலும் அவற்றுக்கான மேய்ச்சல் தரவை இன்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் அவதியுறுவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

எனவே, மேய்ச்சல் தரவைக்காக காணிகளை ஒதுக்கிக்கொடுத்து இப்பிரச்னைக்கு தீர்வு காணுமாறும் அவர் இதன்போது வேண்டுகோள் முன்வைத்துள்ளார். பாராளுமன்றத்தில் வைத்து கருத்து தெரிவிக்கும்போது அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு இலட்சம் கால்நடைகளும், மன்னார் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் கால்நடைகளும், வவுனியா மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 30 ஆயிரம் கால்நடைகளுமாக, வன்னிப் பகுதியில் மொத்தமாக ஏறக்குறைய 3 இலட்சத்து 70 ஆயிரம் கால்நடைகள் காணப்படுகின்றன.

மேய்ச்சல் தரவை இன்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெருத்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். எனவே, இந்த சிக்கல் நிலைமைகளை கருத்தில் கொண்டு கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரவை நிலங்களை ஒதுக்கிக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார். (ஐ)

## பொதுக் கூட்டம்

*யாழ்ப்பாணம், மார்ச் 14*

குப்பிழான் விவசாயிகள் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு விவசாயிகள் சம்மேளன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உடுவில் கமநல சேவை உத்தியோகத்தர் தலைமையில் நடைபெறும் மேற்படி கூட்டத்தில் புதிய நிர்வாகத் தெரிவும் 2025ஆம் ஆண்டுக்கான விவசாய அங்கத்தவர் பதிவும் நடைபெறும்.

ஒவ்வொருவருக்கும் அங்கத்துவ படிவம் வழங்கப்பட்டு அந்த விண்ணப்பப் படிவங்களை பூர்த்திசெய்து தரும் ஒழுங்கில் அவர்களுக்கான அங்கத்துவ இலக்கம் வழங்கப்படும்.

இந்தக் கூட்டத்தில் சம்மேளனப் பதிவில் உள்ள சகல விவசாயிகளும் கலந்து கொண்டு தங்களின் விவசாய பதிவை உறுதி செய்யுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## தையிட்டி விகாரைக்கு எதிராக நேற்றும் முன்னணி போராட்டம்






*யாழ்ப்பாணம், மார்ச் 14*

தனியார் நிலங்களை ஆக்கிரமித்து அமைக்கப்பட்ட தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தையிட்டி திஸ்ஸ விகாரையை அகற்ற வலியுறுத்தி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. இதன்படி, பௌர்ணமி தினமான நேற்றும் விகாரையின் முன்பாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், காணியின் உரிமையாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ-05)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார். தொட்டது துலங்கும் நாள்.

**இடபம்**

புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**மிதுனம்**

எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். நல்லன நடக்கும் நாள்.

**கடகம்**

உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். அரசு காரியங்கள் நல்ல விதத்தில் முடியும். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும்.

**சிம்மம்**

கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புதிய அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கன்னி**

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும்.

**துலாம்**

எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**விருச்சிகம்**

எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். பெற்றோரின் ஆதரவு பெருகும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள்.

**தனுசு**

சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும்.

**மகரம்**

இதுவரை இருந்த அலைச்சல், டென்ஷன், கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.பிரச்னை களுக்கு மாறுபட்ட அணுகுமுறையால்தீர்வு காண்பீர்கள். புது அத்தியாயம்தொடங்கும்.

**கும்பம்**

சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். நிதானம் தேவைப்படும்.

**மீனம்**

உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். திறமைகள் வெளிப்படும்.

# யாழில் 17 உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும்

## அமைச்சர் சந்திரசேகர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், மார்ச்.14

யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உள்ளூராட்சி சபைகளிலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் என்று கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக யாழ்ப்பாணத்தில் உள்ள 17 உளளூராட்சி சபைகளுக்குமான அங்கீகரிக்கப்பட்ட முகவர்களை நியமிக்கும் நடவடிக்கைகளுக்காக

நேற்றுக் காலை யாழ்ப்பாணத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்துக்கு வருகைதந்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான கருணைநாதன் இளங்குமரன், ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன், சண்முகநாதன் சிறீபவானந்தராஜா, தொகுதி அமைப்பாளர்கள், கட்சி உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களும் வருகை தந்தனர். (எ-05)









# உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு யாழில் நேற்று விழிப்புணர்வு நடைபவனி!

யாழ்ப்பாணம், மார்ச்.14

உலக குளுக்கோமா வாரத்தை முன்னிட்டு நேற்றையதினம் யாழ்ப்பாணத்தில் விழிப்புணர்வு நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அத்துடன் விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் சிவன் கோவிலுக்கு முன்பாக ஆரம்பமான இந்த நடைபவனியானது காங்கேசன்துறை வீதியூடாகச் சென்று, பின்னர் மருத்துவமனை வீதியூடாக சென்று எஸ். ரி. எஸ். மருத்துவமனையை அடைந்தது. பின்னர் அந்த மருத்துவமனையில் விழிப்புணர்வு செயலமர்வு நடைபெற்றது.

குளுக்கோமா நோய் என்பது கண்ணில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். இந்த நோயை ஆரம்பத்தில் இனங்கண்டு சிகிச்சையை பெற்றுக் கொள்வதன் மூலம் நோயிலிருந்து குணமடைய முடியும். எனவே, இந்த நோய் தொடர்பில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக நடைபவனி முன்னெடுக்கப்பட்டது.

லயன்ஸ் கழகம் மற்றும் எஸ். ரி. எஸ். தனியார் மருத்துவமனையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த நடைபவனியில், பாடசாலை மாணவர்கள், மருத்துவமனை ஊழியர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-05)

# முப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை மக்களிடம் ஒப்படையுங்கள்

## சபையில் செல்வம் எம். பி. வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச்.14

வடக்கில் விவசாய நிலங்கள் பல இராணுவம் உள்ளிட்ட முப்படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளன. படையினர் அதில் விவசாயம் செய்கின்றனர். இந்தக் காணிகளை விவசாயிகளிடம் ஒப்படைத்தால் நெல்லுக்கான பஞ்சம் இல்லாமல் போகும். விவசாயிகள் வசதியானவர்கள் அல்ல. இவர்கள் பொருளாதார பிரச்னையில் சிக்கி பல துன்பங்களை அனுபவிக்கின்றனர் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தின் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அவர் மேலும் கூறுகையில்,


"மேய்ச்சல் தரை இல்லாமையால் எமது பிரதேச கால்நடைப் பண்ணையாளர்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர். பல மைல்களுக்கு கால்நடைகளை கொண்டு சென்று ஓர் இடத்தில் இருந்து அவற்றை பார்த்துக் கொள்ளும் நிலைமை உருவாகியுள்ளது. கடந்த அரசாங்கங்கள் மேய்ச்சல் தரை தொடர்பில் எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காத நிலையில், இந்த அரசாங்கம் அந்தப் பிரச்னையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேவேளை, வனஜீவராசிகள் மற்றும் வனவள திணைக்களங்கள் அரச நிறுவனங்களாகும். இந்த திணைக்களங்களும் நிலங்களை விடுவிப்பதாக கூறினாலும் அதை செய்வதில்லை. அவர்களுக்கென தனியான சட்டங்கள் இருக்கின்றனவா என்று தெரியவில்லை.

அத்துடன், விவசாய நிலங்கள் பல இராணுவம் உள்ளிட்ட முப்படையினரின் கட்டுப்பாட்டிலேயே இருக்கின்றன. அவர்கள் அதில் விவசாயம் செய்கின்றனர். இந்தக் காணிகளை விவசாயிகளிடம் ஒப்படைத்தால் நெல்லுக்கான பஞ்சம் இல்லாமல் போகும்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்சி தாவிய ஜே.ஆரின் பேரன்



கொழும்பு, மார்ச் 14

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் பிரதீப் ஜயவர்தன, சர்வஜன அதிகாரம் கட்சியுடன் இணைந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து, ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் தாவியிருந்த நிலையிலேயே தற்போது அவர் மீண்டும் கட்சி தாவியுள்ளார்.

அவருடன் இணைந்து மேலும் சில பிரதேச அரசியல்வாதிகளும் சர்வஜன அதிகாரத்துடன் இணைந்துள்ளனர்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் சர்வஜன அதிகாரம் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே அதில் இணைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

## காப்பீட்டை பெறுவதற்கு போலிச் சிட்டை சமர்ப்பித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள்!

கொழும்பு, மார்ச் 14

அக்ரஹார காப்பீட்டுத் திட்டத்தை பெற்றுக்கொள்வதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் போலிச் சிட்டைகளை சமர்ப்பித்துள்ளமை தெரியவந்துள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் மூக்குக் கண்ணாடிகளை கொள்வனவு செய்வதற்கான செலவுகளைப் பெற்றுக் கொள்ள அக்ரஹார காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்துள்ளனர்.

எனினும் அவர்கள் போலியான சிட்டைகளையே வழங்கியுள்ளதாக தற்போது தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

பொலிஸ்மா அதிபருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுரவிடம் தெரிவித்துள்ளது.

இதுவரை 79 பொலிஸ் உத்தியோத்தர்களிடம் இருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

மேலும், மூக்குக் கண்ணாடிகளுக்கு போலி சிட்டைகளை வழங்கிய கடைகள் தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (அ)

## தேசிய விவசாய கொள்கை உடன் வகுக்கப்படவேண்டும்

### சஜித் பிரேமதாஸ கோரிக்கை

கொழும்பு, மார்ச் 14

பல நூற்றாண்டுகளாக எமது நாட்டில் முன்னேற்றம் கண்ட விவசாயமும், சிறந்த நீர்ப்பாசன நாகரீகமும் காணப்பட்டன. இந்த நீர்ப்பாசன நாகரீகமும் விவசாயமும் தற்போது அழிந்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

2025 வரவு-செலவு திட்ட கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாம் ஒரு நாடாக மீண்டும் எழுந்து நிற்க வேண்டுமானால் விவசாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். இது நமது நாட்டிற்கு டொலர்களை ஈட்ட சிறந்த வழியாகும். இது தொடர்பிலான பல யோசனைகளையும் முன்மொழிவுகளையும் இங்கு முன்வைக்கிறேன். இது தொடர்பில் அரசாங்கம் விரைந்து கவனம் செலுத்தும் என நம்புகிறேன்.

நாட்டுக்கென தேசிய விவசாயக் கொள்கையை வகுக்க வேண்டும். காலத்துக்குக் காலம் மாறும் கொள்கைகளுக்குப் பதிலாக தேசியக் கொள்கையை வகுத்து, விவசாய சமூகத்துக்கும் விவசாயத்துக்கும் பெறுமானமளிக்க வேண்டும். விவசாயம் தோல்வி கண்டு விட்டது.

அது நஷ்டம் ஏற்படும் துறை என்று பல்வேறு தரப்பினரும் கூறி வருகின்றனர். நவ லிபரல் சிந்தனைகள் மேலோங்க அனுமதிக்காமல் விவசாயத்தை வலுப்படுத்த தேசிய கொள்கையொன்று எமக்கு தேவையாக காணப்படுகின்றது. இதன் மூலம் விவசாயத்திற்கும், விவசாயிக்கும் உரிய பெறுமானமும், மரியாதையும் வழங்கப்பட வேண்டும்-என்றார். (அ)

## பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த செயல்திறன்மிக்க பொறிமுறை வேண்டும்

### அலி சப்ரி வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 14

**அநுராதபுரம் போதனா வைத்தியசாலை சம்பவம் வீடுகளிலும், பொது இடங்களிலும், பணியிடங்களிலும் பெண்களின் பாதுகாப்பினை உடனடியாக உறுதிப்படுத்தவேண்டியதன் அவசியத்தை நினைவுறுத்துகிறது. அதற்கமைய பெண்களைப் பாதுகாப்பதற்கும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச்செய்வதற்கும், பெண்கள் பாதுகாப்பாக உணரக்கூடிய சூழலைக் கட்டியெழுப்புவதற்கும் ஏதுவான செயற்திறன்மிக்க பொறிமுறையை உருவாக்கவேண்டும் என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி வலியுறுத்தியுள்ளார்.**

அநுராபுரம் போதனா வைத்தியசாலையின் பெண் வைத்தியர்கள் விடுதியில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் நாடளாவிய ரீதியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், இதுகுறித்து முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவரது எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கிறார்.

அப்பதிவில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பதிவாகியிருக்கும் மிக மோசமான சம்பவம் குறித்து அதிர்ச்சியும், அதிருப்தியும் அடைகிறேன். இது அரிதாகப் பதிவானதொரு குற்றச்செயல் அல்ல. மாறாக இச்சம்பவம் எமது நாட்டில் வீடுகளிலும், பொது இடங்களிலும், பணியிடங்களிலும் பெண்களின் பாதுகாப்பினை உடனடியாக உறுதிப்படுத்தவேண்டியதன் அவசியத்தை நினைவுறுத்தும் சமிக்ஞையாக அமைந்திருக்கிறது.

இந்நிலையில் ஒருவர் மீது ஒருவர் குற்றஞ்சுமத்துவதற்குப் பதிலாக, பெண்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்குரிய அர்த்தமுள்ள நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய தருணம் இதுவாகும்.

பெண்களைப் பாதுகாப்பதற்கும், குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறச்செய்வதற்கும், பெண்கள் பாதுகாப்பாக உணரக்கூடிய சூழலைக் கட்டியெழுப்புவதற்கும் ஏதுவான செயற்திறன்மிக்க பொறிமுறையை உருவாக்கவேண்டும்.

பெண்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் அவர்களது கௌரவத்தைப் பாதுகாத்தல் என்பன ஆச்சரியமளிக்கக்கூடிய விடயங்கள் அல்ல. மாறாக அவை எமது சமூகக்கட்டமைப்பின் அடிப்படையாக இருக்கவேண்டும். அதன்படி உண்மையிலேயே மரியாதை, நீதி மற்றும் சமத்துவ கலாசாரத்தையுடைய சமூகத்தைக் கட்டியெழுப்பும் வரை, நாம் இன்னமும் வெகுதூரம் பயணிக்கவேண்டியிருக்கும்-என்று கூறியுள்ளார். (அ)

## இராணுவத்திலிருந்து தப்பிய 20 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 14

இராணுவ முகாம்களில் இருந்து தப்பிச் சென்ற 20 இராணுவ சிப்பாய்கள் கண்டி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது, சந்தேக நபர்களான இராணுவ சிப்பாய்கள் கண்டி, கட்டுகஸ்தோட்டை மற்றும் அலவத்துகொடை ஆகிய பிரதேசங்களில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த இராணுவ சிப்பாய்கள் கண்டி பிரதேசத்தில் பல்வேறு தொழில்களில் பணிபுரிந்துவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## ஐ.தே.க.அமைப்பாளர் சஜித்துடன் சங்கமம்



கொழும்பு, மார்ச் 14

மாத்தறை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைப்பாளர் நந்தசேன செல்லஹேவா எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு தனது ஆதரவை நல்கும் நோக்கில் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

மாத்தறை நகர சபையின் முன்னாள் பிரதி மேயராகவும் இவர் பதவி வகித்தார். இந்நிகழ்வில், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தறை தேர்தல் தொகுதி அமைப்பாளர் பிமல் ஜயசிறி ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

## சீரற்ற காலநிலையால் பாதிப்புற்ற 53,511 விவசாயிகளுக்கு இழப்பீடு!

கொழும்பு, மார்ச் 14

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட 53 ஆயிரத்து 511 விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாக, கமநல காப்புறுதிச் சபையின் தலைவர் பேமசிறி ஜாசிங்காராச்சி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாட்டில் முன்னெப்போதும் இல்லாத வகையில் மிகக் குறுகிய காலத்தில் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கியுள்ளோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதற்காக உடனடி நடவடிக்கை எடுத்தது.

நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் கடந்த நவம்பர் மாதம் சீரற்ற காலநிலை நிலவியது. இதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டன. அவ்வாறு பாதிப்புக்கு உள்ளான 53 ஆயிரத்து 511 விவசாயிகளுக்கு நாம் இழப்பீடு வழங்கியுள்ளோம்.

இதற்காக 952 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்ட 61 ஆயிரத்து 71 ஏக்கர் நிலப்பரப்புக்கே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அமைச்சின் அதிகாரிகள் நேரில் சென்று ஆராய்ந்து உரியவர்களுக்கு நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுத்தனர்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாந்தோட்டை, அநுராதபுரம், குருநாகல், முல்லைத்தீவு, பதுளை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மிகக் குறுகிய காலத்தில் இழப் பீடு வழங்கப்பட்டுள்ளது-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணியிடங்களில் பெண்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்த சட்டத்தை உருவாக்குங்கள்

## பெண் செயல்பாட்டாளர்கள் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 14

**அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்ப வத்துக்குக் கண்டனத்தை வெளிப்படுத்தி கொழும்பில் கவன யீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்த பெண் செயற்பாட் டாளர்கள், பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்ப டுத்துவதற்கு அவசியமான சட்டங்கள் மற்றும் கொள்கைகளை உருவாக்குமாறும், அதற்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளுமாறும் அரசாங்கத்தை வலியுறுத்தினர்.**

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பெண் வைத்தியர்கள் விடுதியில் கடந்த திங்கட்கிழமை இரவு பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் நாடளாவிய ரீதியில் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருப்பதுடன், பெண்களின் பாதுகாப்பு தொடர்பில் பலத்த சந்தேகங்களையும் தோற்றுவித்திருக்கிறது.

இந்நிலையில் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியும், பணியிடங்களில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும் இடதுசாரி பெண்கள் அமைப்பான விடுதலை இயக்கத்தினால் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பிலுள்ள லிப்டன் சுற்றுவட்டத்தில் கவனயீர்ப் புப்போராட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப்போராட்டத்தில் கலந்துகொண்ட பெண் செயற்பாட்டாளர்கள் "பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதியை உறுதிப்படுத்து", "பாலியல் அத்துமீறல்களை நிறுத்து", "பணியிடங்களில் பெண்களின் உரிமைகளை உறுதிப்படுத்து", "பாலியல் வன்புணர்வு கலாசாரம் வேண்டாம்", "வன்முறைகள் வேண்டாம், பெண்களுக்குப் பாதுகாப்பு வேண்டும்", "பெண்களுக்கு எதிரான வன்முறைகளை சாதாரணமயப்படுத்தாதே" எனும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.

அதேவேளை இது குறித்துக் கருத்து வெளியிட்ட பெண்ணிய செயற்பாட்டாளரும், சட்டத்தரணியுமான சுவஸ்திகா அருலிங்கம், "இரு தினங்களுக்கு முன்னர் அநுராதபுரம் வைத்தியசாலையில் பெண் வைத்தியர் ஒருவரும், யாழ்ப்பாணத்தில் மருத்துவ சிகிச்சை பெறவந்த பெண்ணொருவரும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறார்கள்.

எமது நாட்டில் இதற்கு முன்னரும் பாலியல் வன்புணர்வுச் சம்பவங்கள் பதிவாகியிருப்பதுடன், அவற்றில் பலவற்றுக்கு நீதி கிட்டாமலும் போயிருக்கிறது. அந்த வரிசையில் தற்போது பணியிடங்களிலும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது மிகுந்த கரிசனைக்குரிய விடயமாகக் காணப்படுகிறது.

நாட்டில் சுதந்திர வர்த்தக வலயங்களில் பணிபுரியும் பெண்களில் பலர் தினந்தோறும் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். ஆனால் அடுத்தடுத்து ஆட்சி பீடமேறிய அரசாங்கங்கள், அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான சட்டங்களை உருவாக்கவில்லை.

இந்நிலையில் வைத்தியசாலைகளில் பெண் வைத்தியர்கள் மற்றும் நோயாளர்கள் உள்ளடங்கலாக சகல பணியிடங்களிலும் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான கொள்கைகளையும், சட்டங்களையும் உருவாக்குவதுடன் அதற்குரிய நிதி ஒதுக்கீட்டையும் மேற்கொள்ளுமாறு அரசாங்கத்திடம் வலியுறுத்துகிறோம்-என்றார். (அ)

முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு:

# ஐக்கிய மக்கள் காங்கிரஸும் இணைவதற்கு தயார்நிலையில்!

கொழும்பு, மார்ச் 14

முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு ஏற்படுமாயின் ஐக்கிய மக்கள் காங்கிரஸ்ம் இணைவதற்கு தயாராக இருப்பதாக கட்சியின் செயலாளர் நாயகம் ஏ.சி. யஹ்யா கான் தெரிவித்துள்ளார்.

அவ்வர் மேலும் தெரிவிக்கையில்-முஸ்லிம் காங்கிரஸ் தவிர்ந்த - ஏனைய அனைத்து முஸ்லிம் அரசியல் தலைவர்களுடன் கூட்டமைப்பில் இணைவது குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ள நாம் தயாராக உள்ளோம்.

முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு என்பது வரவேற்கத்தக்க ஒரு விடயம். இதை நாம் வரவேற்கிறோம். உள்ளூராட்சி தேர்தலுக்கு மட்டுமன்றி இனி வரும் அனைத்து தேர்தல்களிலும் இந்த கூட்டமைப்பு போட்டியிட வேண்டும்.

22 வருடங்களாக சமூகத்தை ஏமாற்றி - அபிவிருத்திகள் எதையும் செய்யாது - எம்.பிக்களை உருவாக்கும் தொழிற்சாலையாக செயல்படும் கட்சி எமக்கு இனியும் வேண்டாம்.

தேர்தல் நெருங்கும் இந்தத் தருணத்தில் பொய்களையும் ஏமாற்று கருத்துக்களையும் கொண்டு வரும் கட்சி தொடர்பில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும்-என்றார். (அ)

# அதிவேக சாலைக்கு அருகே இளைஞனின் சடலம் மீட்பு!

கொழும்பு, மார்ச் 14

அங்குணுகொலபெலஸ்ஸ - அபேசேகரகம வீதியில், கீரிய கொடெல்ல சந்தியில், அதிவேக நெடுஞ்சாலைக்கு அருகிலுள்ள மேம்பாலத்தின் கீழ் இளைஞனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சடலம் நேற்று காலை வியாழக்கிழமை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் அபேசேகர பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய அபேசிங்க விஜே நாயக்க சந்தீப லக்ஷான் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இளைஞனின் சடலத்துக்கு அருகில் இருந்து மோட்டார் சைக்கிள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குறித்த இளைஞன் கொலை செய்யப்பட்டு பாலத்திலிருந்து வீசப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்த மர்ம மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அங்குணுகொல பெலஸ்ஸ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# விளையாட்டுத்துறை அமைச்சரை சந்தித்துப் பேசினார் சீனத் தூதுவர்



கொழும்பு, மார்ச் 14

சீனத் தூதுவர் கி சென் ஹொங் மற்றும் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சில் நடைபெற்றது.

இலங்கையில் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரங்களின் வளர்ச்சிக்கு சீன அரசாங்கம் ஆதரவை வழங்கும் என்று சீனத் தூதர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்தும் இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டன.

இளைஞர் விவகார பிரதி அமைச்சர் எரங்க குணசேகரவும் இந்த நிகழ்வில் பங்கேற்றார். (அ)

பெண் வைத்தியர் வன்புணர்வு

# சந்தேக நபரின் சகோதரி உட்பட இரண்டு பேர் கைது!

கொழும்பு, மார்ச் 14

அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் பெண் மருத்துவர் ஒருவரை பாலியல் வன்புணர்வு செய்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரின் சகோதரி மற்றும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் உறுதிப்படுத்தியுள்ளனர்.

அதன்படி, 37 வயதுடைய பெண்ணும், 27 வயதுடைய ஆணும் கல்னேவவின் நிதிகும்பயாய பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

இதற்கிடையில் சம்பவம் தொடர்புடைய கைதான பிரதான சந்தேக நபரான கல்னேவ பகுதியைச் சேர்ந்த 34 வயதுடையவர் அனுராதபுரம் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

கல்னேவ பொலிஸாரும் அனுராதபுரம் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரும் இணைந்து மேற்கொண்ட கூட்டுத் தேடுதல் நடவடிக்கையின் போது, கல்னேவ காட்டுப் பகுதியில் மறைந்திருந்தபோது அவர் கைது செய்யப்பட்டார்.

விசாரணையின்போது கிடைத்த தகவல்களின் அடிப்படையின், தாக்குதலின் போது பெண் மருத்துவரை அச்சுறுத்த பயன்படுத்தப்பட்ட கூரிய ஆயுதத்தை பொலிஸார் மீட்டனர்.

சந்தேக நபர் தற்போது அனுராதபுரம் பொலிஸாரின் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

# யானை தாக்கி ஒருவர் மரணம்

கொழும்பு, மார்ச் 14

தியபெதும - திக்கல்பிட்டிய பிரதேசத்தில் காட்டு யானை தாக்கியதில் நபரொருவர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் மகளின் வீட்டில் தற்காலிகமாக வசித்து வந்துள்ளதாகவும், சம்பவ தினத்தன்று இரவு திக்கல்பிட்டிய நவ சக்தி விவசாய அமைப்புக்குச் சென்றுகொண்டிருந்தபோதே இவ்வாறு காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதாகவும் தெரியவருகிறது.

54 வயதுடைய கிரிதலே பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் தற்போது பொலன றுவை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. ம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தியபெதும பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# புறக்கோட்டையில் தீ விபத்து!

கொழும்பு, மார்ச் 14

கொழும்பு, புறக்கோட்டை பிரதான வீதியில் அமைந்துள்ள சிவப்பு பள்ளிவாசலுக்கு அருகில் உள்ள விற்பனை நிலையம் ஒன்றில் பாரிய தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த தீ விபத்து நேற்று வியாழக்கிழமை ஏற்பட்டது.

தீ பரவலை அடுத்து மாநகர சபையின் தீயணைப்புப் படையின் நான்கு தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டு தீ பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

# மேர்வின் சில்வா சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதி!

கொழும்பு, மார்ச் 14

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா உடல் நலக்குறைவு காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மகர சிறைச்சாலை வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர் காமினி பி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.


சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மேர்வின் சில்வாவுக்கு எந்தவிதமான மேலதிக வசதிகளும் வழங்கப்படாது என காமினி பி திசாநாயக்க தெரிவித்தார்.

அவருடைய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனவும் சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் வைத்தியசாலையில் மூன்று இயந்திரங்கள் செயலிழப்பு

## நோயாளர்கள் பெரும் அவதி நிலை



**கொழும்பு, மார்ச் 14**
**தேசிய புற்றுநோய் வைத்தியசாலையில் இயங்கிவந்த 3 லீனியர் ஆக்சிலேட்டர் இயந்திரங்கள் செயலிழந்துள்ளதாக அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத் தலைவர் சானக்க தர்மவிக்ரம தெரிவித்துள்ளார்.**

இயந்திர செயலிழப்புத் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மஹரகம தேசிய புற்றுநோய் வைத்தியசாலையின் கதிரியல் சிகிச்சைப் பிரிவில் இயங்கிவந்த 5 லீனியர் ஆக்சிலேட்டர் இயந்திரங்களில் 3 இயந்திரங்கள் செயலிழந்துள்ளன.

இதன் காரணமாக கதிரியல் சிகிச்சைக்காக பட்டியலிடப்பட்டுள்ள சுமார் 250 நோயாளிகளுக்கான சிகிச்சை சேவைகள் முடங்கியுள்ளன. மேற்படி இயந்திரங்கள் கடந்த 7 ஆம் திகதி அன்று செயலிழந்துள்ளன.

தற்போது இயந்திரங்கள் செயலிழந்து ஒரு வாரம் நிறைவு பெறும் தறுவாயில் உள்ளது. எனினும் உரிய அதிகாரிகளால் இயந்திரங்களை பழுது பார்ப்பதற்கான நடவடிக்கைகள் ஏதும் முன்னெடுக் கப்பட்டதாக தெரியவில்லை. புற்றுநோயாளர்களுக்கான கதிரியல் சிகிச்சைகளை ஆரம் பித்து அவற்றை இடைநடுவே நிறுத்துவதன் மூலம் நோய் மேலும் தீவிரமடைய வாய்ப்புள்ளது.

நாடளாவிய ரீதியில் உள்ள அரச மருத்துவமனைகளில் புற்றுநோய் சிகிச்சைக்காக 10 லீனியர் ஆக்சிலேட்டர் இயந்திரங்கள் மாத்திரமே உள்ளன. அவற்றில் 5 இயந்திரங்கள் தேசிய புற்றுநோய் வைத்தியசாலையிலும், இரண்டு இயந்திரங்கள் கண்டி தேசிய வைத்தியசாலையிலும் உள்ளன. மேலும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, யாழ். போதனா வைத்தியசாலை மற்றும் காலி தேசிய வைத்தியசாலை ஆகியவற்றில் தலா ஒரு இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது.

குறித்த 10 இயந்திரங்களும் அடிக்கடி செயலிழப்பதை காணக் கூடியதாக உள்ளது. இது தொடர்பில் தொழிற்சங்கம் என்ற ரீதியில் சுகாதார அமைச்சுக்கு தெரிவித்துள்ள போதும், அமைச்சு அதை கவனத்தில் கொண்டதாக தெரியவில்லை.

எவ்வாறெனி னும் இந்த இயந்திரங்கள் முழுமையாக பழுதுப்பார்கப் பட்டுள்ளதா என்பது தொடர் பில் சுகாதார அமைச்சு விசாரணை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகிறோம்-என்றார். (அ)

# ஐ.தே.க - ஐ.ம.சக்தி இணைய வாய்ப்பு

## சுயாதீன சின்னத்தில் களமிறங்கலாம்

கொழும்பு, மார்ச் 14
ஐக்கிய தேசிய கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சக்திக்கிடையிலான இணக்கப்பாட்டுடன் சுயாதீன சின்னமொன்றில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் களமிறங்க முடியும்.

அந்த தீர்மானத்தை எட்டுவதற்கு 15ஆம் திகதி வரை எவ்வித தடையும் இல்லை.

அவ்வாறில்லை எனில் யானை சின்னத்தில் தனித்து களமிறங்குவோம் என ஐக்கிய தேசிய கட்சி தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் தொகுதி அமைப்பாளர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிந்தளவு முயற்சித்தார். இணக்கப்பாடு எட்டப்பட்டு யானை சின்னத்தில் தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதே எமது இலக்காகும்.

அடுத்த தெரிவு ஏதேனுமொரு உள்ளூராட்சி மன்றத்தில் ஐக்கிய தேசிய கட்சியாகவோ, ஐக்கிய மக்கள் சக்தியாகவோ அன்றி சுயாதீன சின்னமொன்றில் போட்டியிடுவதாகும்.

15ஆம் திகதி நள்ளிரவு 12 மணி வரை அதற்கு அந்த தடையும் இல்லை என்பதை நினைவுபடுத்துகின்றேன்.

ஒரேயொரு ஆசனத்தை மாத்திரம் ஐ.தே.க. பாராளுமன்றத்தில் பெற்றுக் கொண்ட போது நாம் அழிந்துவிட்டதாக சிலர் எண்ணினர்.

ஆனால் அந்த ஒரு ஆசனமே இலங்கையின் 8ஆவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியை தெரிவு செய்தது.

எனவே தற்போது ஒரு ஆசனம் கூட இல்லை என நாம் சோர்வடைந்து விடக் கூடாது.

ஒரு ஆசனம் கூட இல்லாமலும் ஜனாதிபதியாகலாம்.

ஐ.தே.க. பலம் மிக்கது என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.மேற்குறிப்பிட்ட 3 யோசனைகளுக்கும் இணக்கம் தெரி விக்கப்படாவிட்டால் இறுதி யாக யானை சின்னத்தில் நாம் களமிறங்குவோம்.

அதிலும் எமக்கு இலாபமுள்ளது.77 ஆண்டுகள் சாபம் என தற்போதைய அரசாங்கம் கூறிக் கொண்டிருக்கின்றது. அந்த சாபத்தில் தான் உப்பு பக்கற் ஒன்றின் விலை 110 ரூபாவாகவும், தேங்காயின் விலை 80 ரூபாவாகவும் காணப்பட்டது.

77 ஆண்டு கால ஆட்சிக்கும் 77 நாட்கள் ஆட்சிக்குமுள்ள வித்தியாசத்தை தற்போது மக்களால் உணரக் கூடியதாக இருக்கும்-என்றார். (அ)

# சிறுநீரக நோயாளிகள் ஐவர் இலங்கையில் தினசரி மரணம்

கொழும்பு, மார்ச் 14
இலங்கையில் தினசரி சிறுநீரக நோயாளிகள் ஐவர் உயிரிழப்பதாகத் தேசிய சிறுநீரக நோய்த் தடுப்பு மற்றும் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் தரவுகளின் படி நாட்டில் நாள்பட்ட சிறுநீரக நோய்க்குள்ளானவர்கள் 213,448 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அதே ஆண்டில் 1,626 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதாகவும் தேசிய சிறுநீரக நோய்த் தடுப்பு மற்றும் ஆய்வுப் பிரிவு தெரிவித்துள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில் டயாலிசிஸ் எனப்படும் கூழ்மப்பிரிப்பு சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை 6,582 ஆக காணப்பட்டுள்ளது.

மேலும் சிறுநீரக மாற்று சிகிச்சை நோயாளிகளின் எண்ணிக்கை சுமார் 300 ஆக இருப்பதாகவும் வடமத்திய மாகாணத்திலேயே அதிக எண்ணிக்கையிலான சிறுநீரக நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இத்தகைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, 2006 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதத்தின் இரண்டாவது வியாழக்கிழமை உலக சிறுநீரக தினம் கொண்டாடப்படுகிறது.

அதனடிப்படையில் “விழிப்புடன் இருங்கள், ஆரம்பத்திலேயே கண்டறியுங்கள், சிறுநீரகங்களைக் காப்பாற்றுங்கள்” என்பது இந்த ஆண்டின் கருப்பொருளாக காணப்படுகிறது. (அ)

# இலங்கையில் தரமான பொருட்கள், சேவைகள் விநியோகத்தை உறுதி செய்ய ஜப்பான் ஆதரவு

கொழும்பு, மார்ச் 14
நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளரையும் பாதுகாத்து இலங்கையில் தரமான பொருட்கள் மற்றும் சேவைகளின் விநியோகத்தை உறுதி செய்வதற்குத் தேவையான கொள்கை ரீதியான மாற்றங்கள் மற்றும் நிறுவனக் கட்டமைப்பு மேம்பாடுகளுக்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் மற்றும் ஜப்பான் நியாய வர்த்தக ஆணைக்குழு ஆகியவை ஆதரவு தெரிவித்துள்ளன.

குறித்த நிறுவனங்களின் பிரதிநிதிகள் நேற்று முன் தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவை சந்தித்தபோது இது குறித்து கலந்துரையாடப்பட்டது.

வர்த்தகத்தில் நியாயபூர்வமிக்க தன்மையை உருவாக்குவதன் மூலம் நுகர்வோர் மற்றும் உற்பத்தியாளர் பாதுகாக்கப்படுவதோடு, இதன் மூலம் நாட்டில் போட்டிமிக்க சந்தை உருவாக்கப்படுகின்றது எனவும் பிரதிநிதிகள் குழு இங்கு சுட்டிக்காட்டியது.

இந்தப் போட்டித்தன்மை வாய்ந்த வர்த்தகக் கொள்கை, குறிப்பாக ஜப்பான் அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்துக்கு எவ்வாறு பங்களித்துள்ளது என்பதை பிரதிநிதிகள் குழு எடுத்துரைத்ததுடன், நுகர்வோர் உரிமைகள் மற்றும் புத்தாக்கங்களுக்கு அதன் பங்களிப்பை விளக்கியது.

இலங்கை சந்தையை உயர் தரத்திற்கு உயர்த்துவதன் மூலம் நியாயமான வர்த்தகத்தை உறுதி செய்வதற்குத் தேவையான கொள்கை மாற்றங்கள் குறித்து இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதியின் செயலாளர்,

மேலும் அந்தத் திட்டங்கள் குறித்து பிரதிநிதி களுக்கு தெளிவுபடுத்தினார்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபோன்சு, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் சார்பாக, டெட்சுயா யமாடா, அரிசா இனாடா, யூரி ஹொரிட்டா, நாமல் ரலபனாவ, ஜப்பான் நியாய வர்த்தக ஆணைக்குழு சார்பாக வை. சகுமா, வை.அசஹினா வை.புகுஷிமா, எம்.டகுசி ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (அ)

# மித்தெனிய துப்பாக்கி சூடு மேலும் ஒருவர் கைதானார்!

கொழும்பு, மார்ச் 14
மித்தேனியவில் அண்மையில் நடந்த மூன்று கொலைகளுக்கு உதவியதாகவும், உடந்தையாக இருந்ததாகவும் தேடப்பட்டு வந்த சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் டுபாய்க்குச் செல்ல முயன்றபோது கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் மற்றும் இரண்டு முன்னாள் இராணுவ வீரர்கள் உட்பட பத்துக்கும் மேற்பட்ட சந்தேக நபர்களை பொலிஸார் இது வரை கைது செய்துள்ளனர்.

பெப்ரவரி 18 ஆம் திகதி இரவு மித்தெனியாவில் உள்ள கடேவத்த சந்திக்கு அருகில் தனது இரண்டு குழந்தைகளுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரை இலக்கு வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.இதனால், மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற “கஜ்ஜா” என்ற நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.


அவரது மகனும் மகளும் படுகாயமடைந்த நிலையில் எம்பிலிப்பிட்டிய மற்றும் தங்காலை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர். மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டபோதிலும், தங்காலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சிறிது நேரத்திலேயே ஆறு வயது மகள் உயிரிழந்தார். அதே நேரத்தில் ஒன்பது வயது மகன் மறுநாள் இறந்தார்.

“பெக்கோ சமன்” என்று பிரபலமாக அறியப்படும் பிரபல போதைப்பொருள் கடத்தல்காரரின் கஞ்சா பொதியை திருடியதற்கு பழிவாங்கும் விதமாக இந்தக் கொலை திட்டமிடப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். எவ்வாறெனினும், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பாறை கரையோரப் பிரதேசங்களில்

# காட்டு யானைகளின் தொல்லை அதிகரிப்பு



காரைதீவு, மார்ச்.14

**அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர், காரைதீவு, மாவடிப்பள்ளி, சாய்ந்தமருது, சம்மாந்துறை போன்ற கரையோர பிரதேசங்களில் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.**

சுமார் 150 இற்கும் மேற்பட்ட யானைகள் கூட்டமாக வந்து அறுவடைக்குத் தயாராக இருக்கின்ற வேளாண்மைகளையும், பயன் தரும் மரங்களையும், கடைகளையும் சேதப்படுத்துகின்றன.

காட்டு யானைகளின் தொல்லைகளால் பொது மக்களும், விவசாயிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இரவு வேளைகளில் நிந்தவூர் - அக்கரைப்பற்று வீதியிலும், காரைதீவு - அம்பாறை வீதியிலும் நடமாடுவதற்கு பொது மக்கள் மிகுந்த அச்சத்துடன் உள்ளனர்.

யானைகளை காட்டுப் பகுதிகளுக்கு விரட்டுவதற்கு வனவளத்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை, நேற்று முன்தினம் புதன்கிழமை சாய்ந்தமருது கமநலச் சேவைகள் மத்திய நிலையத்தின் கீழ் உள்ள குடாக்கள்ளி மேற்கு கண்டத்தில் அறுவடைக்குத் தயராக இருந்த சுமார் 15 ஏக்கர் வேளாண்மைகளை பட்டப்பகலில் காட்டு யானைகள் நாசமாக்கியுள்ளன.

அடிக்கடி ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்களுக்கு மத்தியில் மிகுந்த செலவுடன் செய்கை பண்ணப்பட்ட வேளாண்மைகளை காட்டு யானைகள் அழித்துக் கொண்டிருப்பது வேதனைக்குரியதென விவசாயிகள் கூறினர்.

எனவே, காட்டு யானைகளால் ஏற்பட்டுள்ள சேதங்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்குரிய நடவடிக்கைகளையும் அதிகாரிகள் எடுக்க வேண்டுமென்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ)



# 20 லீற்றர் கசிப்புடன் இருவர் கைதாகினர்

சம்மாந்துறை, மார்ச்.14

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அலவக்கரை வீதியிலுள்ள வீடொன்றில் சுமார் 20 லீற்றர் கசிப்புடன் இரண்டு சந்தேக நபர்கள் சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவினரால் நேற்று முன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீரமுனை 04 பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஆணொருவரும், வீரமுனை 01 பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய பெண்ணொருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஒருவரிடமிருந்து சுமார் 14 லீற்றர் கசிப்பும், மற்றவரிடமிருந்து 6 லீற்றர் கசிப்பும் சம்மாந்துறை பொலிஸ் நிலைய ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்து சந்தேக நபர்கள் இருவரும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ)



# ஊடகவியலாளர்களுக்கான நலன்புரித் திட்டம் ஆரம்பம்

மட்டக்களப்பு, மார்ச்.14

கிழக்கு மாகாண ஊடகவியலாளர்களுக்கான விசேட நலன்புரித் திட்டம் மட்டக்களப்பு, ஓட்டமாவடியில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரன் இதற்கான நிதியுதவியை வழங்கினார்.

"ஊடகவியலாளர்கள் நாம் நேசத்தால் ஒன்றிணைவோம்! குரலற்றவரின் குரலாவோம்" எனும் தொனிப்பொருளில் சிறீலங்கா மீடியா போரத்தின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் இந்த நிகழ்வு ஓட்டமாவடி பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. (எ-01- 07)

# பொருளாதார மத்திய நிலையம் குறித்து பிரதியமைச்சர் ஆராய்வு

மட்டக்களப்பு, மார்ச்.14

வர்த்தக வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு பிரதியமைச்சர் ஆர். எம். ஜெயவர்த்தன கடந்த 11 ஆம் திகதி மட்டக்களப்புக்கு வருகை தந்திருந்தார்.

அப்போது அவர், களுதாவளையில் அமைந்துள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்டு அங்குள்ள குறைநிறைகளை வர்த்தகர்களிடமும், அப்பகுதி விவசாயிகளிடமும் கேட்டறிந்து கொண்டார்.

கிராமிய பொருளாதார அமைச்சால் 300 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் குறித்த பொருளாதார மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டு 2017 ஆண்டு இறுதிப்பகுதியில் வேலைகள் முடிவுறுத்தப்பட்டு இற்றைவரையில் அது மக்கள் பாவனைக்கு விடப்படாமல் உள்ளது.



கிழக்கு மாகாணத்துக்கென அமையப்பெற்றுள்ள இந்த விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் வர்த்தக நடவடிக்கைகளை மேலும் விஸ்தரித்து அப்பகுதி விவசாயிகளுக்கும், வர்த்தகர்களுக்கு வசதி வாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய முன்னெடுப்புக்களை மேற்கொள்வதற்காக பிரதியமைச்சர் வருகை தந்து நிலைமைகளை நேரில் அவதானித்தார்.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்ரினா யுலேக்கா முரளிதரன், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் உ . உதயசிறீதர் உள்ளிட்ட பல அதிகாரிளும் இதில் கலந்து கொண்டனர். (எ)

# 'பூஜா பூமி' போர்வையில் 3,820 ஏக்கர் நிலம் கபளீகரம்

கொழும்பு,மார்ச்.14

திருகோணமலை மாவட்டத்தில் 3, 820 ஏக்கர் நிலத்தை "பூஜா பூமி" என்ற பெயரில் புத்த பிக்குகள் கையகப்படுத்தியுள்ளனர் என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

2025 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் கமத் தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு தொடர்பான விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"இந்த அரசால் முன்வைக்கப்பட்டுள்ள வரவு - செலவுத் திட்டத்தில் கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சுக்கு மீண்டெழும் செலவுக்காக 83. 9 பில்லியன் ரூபாயும் மூலதன செலவுக்காக 133 பில்லியன் ரூபாயும் மொத்தமாக 216.9 பில்லியன் ரூபாயும் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டை விட 62 பில்லியன் ரூபாய் அதிகமாகும். இது வரவேற்கத்தக்கது.

எனினும், விவசாய மற்றும் கால்நடை துறைக்கான ஒதுக்கீடானது கடந்த ஆண்டை விட 2. 6 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளதோடு இதன் அபிவிருத்திக்கான ஒதுக்கீடு 5.76 வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஊடான அபிவிருத்திக்கான ஒதுக்கீடானது கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 22.4 ( 6037 மில்லியன் ரூபாய் ) வீதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. இக்குறைப்புகள் நாட்டின் அரிசி உற்பத்தியில் தன்நிறைவு காண வேண்டும் என்ற அரசின் நோக்கத்துக்கு ஏற்புடையதல்ல.

அண்மைக்காலத்தில் இலங்கையில் அரிசி விலை ஏற்றம், அரிசித் தட்டுப்பாடு ஆகியன முதன்மையான சிக்கல்களாகக் காணப்படுகின்றன. [illegible] ஏற்ப நிரம்பல் இல்லாதவிடத்து பொருள் விலையேறும் என்பதை அனைவரும் அறிவர்.

அரிசியின் நிரம்பல் குறைவாக இருப்பதே அதன் விலை ஏற்றத்துக்கு முதன்மையான காரணமாகும். ஒரு காலத்தில் அரிசியை ஏற்றுமதி செய்த நாடு, இன்று இறக்குமதி செய்ய வேண்டிய நிலை ஏன் ஏற்பட்டது? என்பதற்கான மூல காரணத்தை கண்டறிந்து, அதைத் தீர்க்க அரசு முனைய வேண்டும்.

திருகோணமலை மாவட்டதில் உள்ள குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவில் 29,430 ஏக்கர் நிலத்தை வனத்துறை கையகப்படுத்தி வைத்துள்ளது. மேலும் 28,372 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்த முனைகிறது. வனவிலங்குத் துறை 7,330 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளது, தொல்பொருள் துறை 1,087 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தி உள்ளது, புத்த பிக்குகள் பூஜா பூமி என்ற பெயரில் 3,820 ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தியுள்ளனர். இதன்மூலம், 1985 ஆம் ஆண்டுக்கு முன்பு மக்கள் விவசாயம் செய்த 70,039 ஏக்கர் நிலம் நெல் உற்பத்தி செய்யாமல் தடுக்கப்பட்டுள்ளது. இதனால், ஒரு போகத்தில் 140,000 மெற்றிக் தொன் நெல் உற்பத்தி குறைக்கப்படுகிறது"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவை சீண்டும் வகையில் மகாசாகர் திட்டம் முன்வைப்பு

## மொரீசியஸில் இந்திய பிரதமர் மோடி



போர்ட் லூயிஸ், மார்ச்.14

**உலகளாவிய தெற்கு பகுதியில் தனி ஆதிக்கம் செலுத்த சீனா முயன்று வரும் சூழலில், அனைத்துத் தரப்பினருக்கும் வேண்டிய வளர்ச்சியை கவனத்தில் கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மகாசாகர் திட்டத்தை முன்வைத்துள்ளார்.**

இதேவேளை, பிரதமர் மோடி மற்றும் மொரீசியஸ் பிரதமர் நவீன்சந்திர ராம்கூலம் முன்னிலையில், மொரீசியஸ் தலைநகர் போர்ட் லூயிஸ் நகரில் 8 ஒப்பந்தங்கள் நேற்று முன்தினம் கையெழுத்தாகின.

மொரீசியஸின் 57ஆவது சுதந்திர தின கொண்டாட்டத்தில் சிறப்பு விருந்தினராக பங்கேற்க பிரதமர் மோடி நேற்று முன்தினம் அந்த நாட்டுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

இந்த பயணத்தின் ஒரு பகுதியாக, பிரதமர் மோடிக்கு மொரீசியஸ் நாட்டின் உயரிய விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

உலகளாவிய தெற்கு பகுதியில், தன்னுடைய செல்வாக்கை விரிவாக்கம் செய்யும் தடையற்ற முயற்சிகளில் சீனா ஈடுபட்டு வருகிறது. இது இதனை சுற்றியுள்ள பிற சிறிய நாடுகளில் பெரும் தாக்கம் ஏற்படுத்துகிறது. தாய்வானை ஆக்கிரமிப்பு செய்யும் நோக்குடன் சீனாவின் விமானங்கள் மற்றும் கப்பல்கள் வலம் வரும் சூழலில், அதற்கு உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. தென்சீன கடல் பகுதியிலும் சீனா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இதற்கு, வியட்நாம் மற்றும் பிலிப்பைன்ஸ் போன்ற சில அண்டை நாடுகள் எதிர்ப்பு நிலைப்பாட்டை கொண்டுள்ளன.

இந்தச் சூழலில், உலகளாவிய தெற்கு பகுதிக்கான பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி தொடர்பான பெரும் தொலைநோக்கு பார்வையை பிரதமர் மோடி மொரீசியஸிலிருந்து வெளியிட்டார்.

10 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவால், சாகர் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது பற்றியும் இந்த மண்டலத்தில் அனைவருக்கும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான திட்டம் என்பதே மகாசாகர் திட்டத்தின் விரிவாக்கமாகும் என்றும் அவர் கூறினார்.

இதன்படி, அனைத்து பகுதிகளிலும் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்கான பரஸ்பரம் மற்றும் முழுமையான நவீனத்துவம் வாய்ந்த ஒன்றாக நம்முடைய உலகளாவிய தெற்கு பகுதிக்கான தொலைநோக்கு பார்வை - மகாசாகர் திட்டம் இருக்கும் என்றும் மோடி குறிப்பிட்டார். (எ)



# அமெரிக்க துணை ஜனாதிபதி இம்மாதம் இந்தியா செல்கிறார்

வாஷிங்டன், மார்ச்.14

அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே. டி. வான்ஸ் இம்மாத இறுதியில் இந்தியா செல்லவுள்ளார்.

அமெரிக்காவின் ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற நிலையில், அவருக்கு அடுத்து கவனம் பெற்றவர் துணை ஜனாதிபதி ஜே. டி.வான்ஸ்.

இந்த நிலையில், ஜே. டி. வான்ஸ் இம்மாத இறுதியில் இந்தியா செல்லவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜே. டி. வான்ஸின் இந்தியப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது. (எ)

# பாகிஸ்தானில் ரயில் கடத்தல் பலி எண்ணிக்கை அதிகரிப்பு

இஸ்லாமாபாத், மார்ச்.14

பலூச் விடுதலைப் படையினர் நடத்திய ரயில் கடத்தல் சம்பவம் 30 மணி நேரத்துக்குப் பின்னர் முடிவுக்கு வந்ததாக பாகிஸ்தான் இராணுவம் நேற்றுக் காலை அறிவித்துள்ளது. இதில், ரயில் பயணிகளில் 21 பேரும், பாதுகாப்புப் படையினர் 4 பேரும் உயிரிழந்ததாக தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "குவெட்டாவிலிருந்து பெஷாவர் நோக்கிச் சென்ற ஜாபர் எக்ஸ்பிரஸ் ரயிலை பலூச் விடுதலைப் படையினர் வெடி வைத்து தடம்புரளச் செய்து பின்னர் கடத்தினர். இந்தத் தாக்குதல், கடத்தல் சம்பவத்துக்குப் பின்னால் ஆப்கானிஸ்தானிலிருந்து செயல்படும் தீவிரவாதக் கும்பல்கள் இருப்பதை உளவுத்துறை உறுதி செய்துள்ளது. இந்த நிலையில், ஆப்கானிஸ்தானின் இடைக்கால அரசு இந்தத் தாக்குதல் போன்று பாகிஸ்தானுக்கு எதிரான தீவிரவாத நடவடிக்கைகள் அதன் மண்ணில் அரங்கேறாமல் தவிர்க்கும் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

தீவிரவாதிகளுடன் சண்டை தொடர்ந்த நிலையில், 30 மணி நேர போராட்டத்துக்குப் பின்னர் கடத்தல் சம்பவம் முடிவுக்கு வந்துள்ளது. இதில், ரயில் பயணிகளில் 21 பேரும், படையினர் 4 பேரும் உயிரிழந்தனர். தற்கொலைப் படை தீவிரவாதிகள் உட்பட 33 தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தப்பட்டனர்"-என்றும் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# பாராளுமன்ற தேர்தலில் எதிர்க்கட்சிகள் வெற்றி!

## கிரீன்லாந்தில் ஆட்சி மாற்றம்

நூக், மார்ச்.14

கிரீன்லாந்து பாராளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன.

வடதுருவத்தில் உள்ள உலகின் மிகப்பெரிய தன்னாட்சி தீவு பிராந்தியமாக கிரீன்லாந்து உள்ளது. 57 ஆயிரம் பேர் மட் டும் வசிக்கும் இதன் 80 சதவீத நிலப் பகுதி பனி சூழ்ந்து வாழத் தகுதியற்றதாக உள்ளது. டென் மார்க் கட்டுப்பாட்டுக்குள் சுமார் 300 ஆண்டுகளாக இருந்து வந்த இந்தத் தீவு, 1953ஆம் ஆண்டு அந்த நாட்டின் ஒரு பகுதியாக அங்கீகாரம் பெற்றது. 1979ஆம் ஆண்டு பாதுகாப்பு மற்றும் வெளிவிவகார கொள்கைகள் தவிர்த்து பிற கொள்கைகளை கவனித்து கொள்ள தன்னாட்சி சுதந்திரம் வழங்கப்பட்டது. அன்று முதல் கிரீன்லாந்தில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது.

முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீவுக்கு அருகே ஆர்ட்டிக் பெருங்கடலில் ரஷ்யா மற்றும் சீனா ஆராய்ச்சி மையங்கள் அமைத்துள்ளன. கிரீன்லாந்து பனிப்பாறைகளில் யுரேனியம், இயற்கை எரிவாயு கொட்டி கிடக்கிறது. இதனால், அமெரிக்க ஜனாதிபதியாக ட்ரம்ப் பதவி யேற்றதிலிருந்து கிரீன் லாந்தை வாங்க விருப்புவதாக தெரிவித்து வந்தார்.

கடந்த வாரம் அமெரிக்கா பாராளுமன்றக் கூட்டத்தொடரில் ட்ரம்ப் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர், "தேசிய பாதுகாப்புக்கு கிரீன்லாந்து தேவை. எப்படியாவது நான் அதைப் அடைந்தே தீருவேன்" எனக்கூறி தனது இலட்சியத்தை வெளிப்படுத்தினார். முன்னதாக "நீங்கள் விரும்பினால், உங்களை அமெரிக்காவுக்கு வரவேற்கிறோம்" என கிரீன்லாந்து நாட்டு மக்களின் ஆசையை தூண்டிவிட்டார். இதற்கு, "கிரீன்லாந்து விற்பனைக்கு அல்ல" என கிரீன்லாந்து மற்றும் டென்மார்க் அரசாங்கங்கள் பதிலடி கொடுத்தன.

இந்தச் சூழலில்தான் கிரீன்லாந்தில் நேற்று முன்தினம் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. அந்த தீவு பிராந்தியத்தில் 31 எம்.பிக்களைத் தெரிவு செய்ய பொதுமக்கள் ஆர்வத்துடன் வாக்களித்தனர். இதில், எதிர்க்கட்சி கூட்டணி 51. 4 சதவீத வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றது. ஆளுங் கட்சி கூட்டணி 36.1 சதவீத வாக்குகளைப் பெற்று தோல்வி யடைந்தது. (எ)

# சுனிதா வில்லியம்ஸ் பூமி திரும்புவதில் மீண்டும் சிக்கல்



வாஷிங்டன், மார்ச்.14

9 மாதங்களாக விண்வெளி மையத்தில் சிக்கித் தவித்து வரும் சுனிதா வில்லியம்ஸ், புட்ஸ் வில்மோர் பூமி திரும்புவதில் மீண்டும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நேற்று அதிகாலை 05.18 மணிக்கு புளோரிடாவில் இருந்து டிராகன் விண்கலத்துடன் சீறிப்பாய தயாராக இருந்த பால்கன் 9 ரொக்கெட்டில் கடைசி நேரத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளது. இதனால், ஸ்பேஸ் எக்ஸ் க்ரூ-10 மிஷன் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

சுனிதாவை அழைத்து வரும் க்ரூ-10 மிஷன் ஒத்திவைக்கப்பட்டதற்கு ஹைட்ராலிக் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே காரணம் என்று நாசா தெரிவித்துள்ளது. அதனை சரிசெய்யும் பணியில் விண்வெளி ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர் என்றும் தொழில்நுட்பக் கோளாறு சரி செய்யப்பட்ட பின் இன்று அதிகாலை 04.56 மணிக்கு ரொக்கெட் விண்ணில் செலுத்த வாய்ப்பு உள்ளதாகவும் நாசா தெரிவித்துள்ளது. (எ)

# மும்மொழி கொள்கையில் தி. மு. க. இரட்டை வேடம்

## அமைச்சர் நிர்மலா தெரிவிப்பு

புதுடில்லி, மார்ச்.14

மும்மொழி கொள்கையில் தி.மு.க. எம்.பிக்கள் இரட்டை வேடம் போடுவதாக இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

தேசிய கல்விக் கொள்கை விவகாரத்தில், தமிழக எம்.பிக்கள் காட்டும் எதிர்ப்பு அநாகரிகமானது என இந்திய மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பாராளுமன்றத்தில் கூறியதற்காக கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து, அவர் தான் கூறியதைத் திரும்பப்பெற்றார்.

இந்த விவகாரத்தை நேற்று முன்தினம் மக்களவையில் எழுப்பிய அமைச்சர் நிர்மலா கூறுகையில், "அநாகரிகமாக போராட்டம் நடத்துகிறீர்கள் என மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியதற்காக தி.மு.க. எம்.பிக்கள் போராட்டம் நடத்துகிறீர்கள். தர்மேந்திர பிரதான் கூறியதை திரும்பப் பெற வைத்தார்கள். அவர்களிடம் பணிவுடன் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

ஒரு பிரபல மூத்த தலைவர் தமிழ் பற்றி கூறியதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவருடைய பெயரை குறிப்பிட விரும்பவில்லை. ஆனால், அவர் கூறியதை வாசிக்கிறேன். அவர் யார் என்று தமிழ் மொழியை அறிந்தவர்களுக்கு தெரியும். அவர் கூறியது கடந்த 1943ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் திகதி வெளியான விடுதலை இதழில் வெளியிடப்பட்டது.

"தமிழ் படித்தால் பிச்சை கூட கிடைக்காது. தமிழ் படித்தது பிச்சை எடுப்பதை தவிர உயிர் வாழ ஒன்றுக்கும் பயன்படவில்லை. இதற்காக செலவிட்ட காலத்தை வேறு துறையில் செலவிட்டிருந்தால், வாழ்வில் பயன் ஏற்பட்டிருக்கும்" என்பதை 100 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் கற்ற ஒரு அனுபவ புலவர் கூறினார். தமிழை பற்றி எவ்வளவு இழிவாக அவர் கூறினார் என்பதற்கு இந்த ஒரு வரி போதும்.

ஆனால், அவரது படத்தை தி.மு.க. எம்.பிக்கள் தங்கள் அறையில் வைத்து வழிபடுகிறீர்கள். ஆனால், அநாகரிகமாக போராட்டம் நடத்துகிறீர்கள் என அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியதற்காக அவரை மன்னிப்பு கேட்க வேண்டும் என கூறுகிறீர்கள்"- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ்: ஸ்வியாரெக் அசத்தல் வெற்றி



கலிபோர்னியா, மார்ச்.14

இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் தொடரில் அசத்தல் வெற்றியை பதிவு செய்த இகா ஸ்வியாரெக் காலிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்தியன்வெல்ஸ் ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி தொடர் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது.

இதில், மகளிர் ஒற்றையர் பிரிவின் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான போலந்தின் இகா ஸ்வியாரெக், செக் குடியரசின் கரோலின் முச்சோவாவுடன் மோதினார். இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி 6-1 மற்றும் 6-1 என்ற நேர்செட் கணக்கில் எளிதில் வெற்றி பெற்ற இகா ஸ்வியாரெக் காலிறுதிக்கு முன்னேறினார். (எ)

# பங்களாதேஷ் வீரர் மஹ்மதுல்லா ஓய்வு

டாக்கா, மார்ச்.14

பங்களாதேஷ் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான மஹ்மதுல்லா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

அண்மையில் முடிவடைந்த ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் ஒரு வெற்றி கூட பெறாத பங்களாதேஷ் அணி லீக் சுற்றுடன் வெளியேறியது. இந்தியா மற்றும் நியூசிலாந்துக்கு எதிராக தோல்வியை தழுவிய நிலையில், பாகிஸ்தானுக்கு எதிரான ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. இதனால், ஒரு புள்ளி மட்டுமே பெற்ற பங்களாதேஷ் அணி அடுத்த சுற்று வாய்ப்பை இழந்து வெளியேறியது.

இந்த நிலையில், இந்தத் தோல்வியின் எதிரொலியாக பங்களாதேஷ் அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான மஹ்மதுல்லா சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இந்தத் தொடரில் ஓர் ஆட்டத்தில் மட்டுமே விளையாடிய மஹ்மதுல்லா 4 ஓட்டங்கள் மட்டுமே அடித்து ஏமாற்றத்தை கொடுத்தார். 39 வயதான அவர், தனது சமூக வலைத்தள பக்கங்களில் இந்த முடிவை அறிவித்துள்ளார்.

மஹ்மதுல்லா பங்களாதேஷ் அணிக்காக 239 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 5689 ஓட்டங்கள் மற்றும் 52 விக்கெட்கள் வீழ்த்தியுள்ளார். (எ)




# தோல்வி மிகவும் வருத்தமளிக்கிறது

## தொடர் நாயகன் ரச்சின்




வெலிங்டன், மார்ச்.14

இறுதிப் போட்டியில் அடைந்த தோல்வி மிகவும் வருத்தமளிக்கிறது என்று ரச்சின் ரவீந்திரா தெரிவித்தார்.

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் டுபாயில் கடந்த 09 ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் இந்தியா அணி 4 விக்கெட்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை வீழ்த்தி 3ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை கைப்பற்றியது. இதில், நியூசிலாந்து அணியின் சகல துறை வீரர் ரச்சின் ரவீந்திரா (263 ஓட்டங்கள், 3 விக்கெட்கள்) தொடர்நாயகன் விருதை வென்றார்.

இந்தத் தொடர் குறித்து ரச்சின் ரவீந்திரா கூறுகையில், "சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் தோல்வியடைந்ததை நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. இருந்தாலும் இந்திய அணி வெற்றி பெற்றதற்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகள். இந்தத் தொடரில் விளையாடியதில் உண்மையிலேயே எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நியூசிலாந்து அணியில் இடம்பெற்று விளையாடுவதை நினைத்து மிகவும் பெருமையாகவுள்ளது. தொடர் நாயகன் விருதை வென்றதை விட இறுதிப்போட்டியில் ஏற்பட்ட தோல்வியை ஏற்றுக்கொள்ள வருத்தமாகவுள்ளது"- என்றார். (எ)

# "அவசர சிகிச்சை பிரிவில் பாகிஸ்தான் கிரிக்கெட்"

லாகூர், மார்ச்.14

பாகிஸ்தான் கிரிக்கெட் தற்போது அவசர சிகிச்சை பிரிவில் உள்ளது என்று ஷஹீத் அப்ரிடி விமர்சித்துள்ளார்.

அண்மையில் முடிவடைந்த 9ஆவது ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் நியூசிலாந்தை வீழ்த்தி இந்தியா சம்பியன் பட்டம் வென்றது.இந்தத் தொடரில் நடப்பு சம்பியனாக களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஒரு வெற்றி கூட பெறாமல் தனது பிரிவில் (ஏ பிரிவு) கடைசி இடம்பிடித்து பரிதாபமாக வெளியேறியது. இந்த நிலையில் பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர் அப்ரிடி கூறுகையில்,

"கடந்த ரி - 20 உலகக் கிண்ணப் போட்டிக்கு பிறகு சகல துறை வீரர் ஷதாப் கான் நீக்கப்பட்டார். ஆனால், தற்போது அவர் அணிக்கு திரும்ப அழைக்கப்பட்டுள்ளார். அத்துடன் நியூசிலாந்து தொடரில் ரி - 20 அணியின் துணைத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் எந்த அடிப்படையில் அணிக்கு மீண்டும் அழைக்கப்பட்டார் என்பது தெரியவில்லை. தகுதியின் அடிப்படையில் முடிவு எடுக்கப்படாவிட்டால் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் எதுவும் மாறாது. நாங்கள் எல்லா நேரங்களிலும் போட்டிகள் வரும்போது தயாராகுவது குறித்து பேசுகிறோம். போட்டியில் தோல்வியடையும்போது முடிவு பற்றிப் பேசுகிறோம்"- என்றார். (எ)

# 4ஆவது சுற்றுக்கு கோகோ கப் தகுதி



கலிபோர்னியா, மார்ச்.14

இந்தியன்வெல்ஸ் ரென்னிஸ் தொடரில் கோகோ கப் 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றுள்ளார்.

பல முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள இந்தியன்வெல்ஸ் ஓபின் சர்வதேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்று வருகிறது.

இதில், மகளிர் ஒற்றையர் பிரிவில் நேற்று முன்தினம் நடைபெற்ற 3ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் முன்னணி வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ கப், கிரீஸின் மரிய சக்காரியுடன் மோதினார். இதில் 7-6 மற்றும் 6-2 என்ற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்ற கோகோ கப் 4ஆவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார். (எ)

# மகளிர் பிரீமியர் லீக் இறுதிப்போட்டி நாளை



மும்பை, மார்ச்.14


மகளிர் பிரீமியர் லீக் இறுதிப் போட்டி நாளை நடைபெறவுள்ளது.

இந்தியாவில் நடைபெற்று வரும் 5 அணிகள் இடையிலான 3ஆவது மகளிர் பிரீமியர் லீக் தொடர் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. கடந்த மாதம் 14ஆம் திகதி தொடங்கிய இந்த தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் நிறைவடைந்தன.

இதன் முடிவில் புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்த டில்லி கப்பிடல்ஸ் இறுதிப்போட்டிக்கு நேரடியாகத் தகுதி பெற்றது. 2ஆவது மற்றும் 3ஆவது இடத்தை பிடித்த மும்பை இந்தியன்ஸ் மற்றும் குஜராத் ஜெயண்ட்ஸ் ஆகிய அணிகள் வெளியேற்றுதல் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

இதில், வெற்றி பெறும் அணி நாளை 15ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதிப்போட்டியில் டில்லியுடன் மோதும். தோல்வியடையும் அணி 3ஆவது இடத்தைப் பிடிக்கும். புள்ளிப் பட்டியலில் கடைசி 2 இடங்களைப் பிடித்த பெங்களூரு, உ.பி.வாரியர்ஸ் அணிகள் லீக் சுற்றுடன் வெளியேறின. (எ)

# ஐ. சி. சி. பெப்ரவரி மாத சிறந்த வீரர் சுப்மன் கில்




டுபாய், மார்ச்.14

ஐ. சி. சியின் பெப்ரவரி மாத சிறந்த வீரர் விருதை சுப்மன் கில் வென்றுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தெரிவு செய்து கௌரவித்து வருகிறது. இதன்படி, பெப்ரவரி மாதத்துக்கான சிறந்த வீரர், வீராங்கனையை தெரிவு செய்ய தலா 3 வீரர் மற்றும் விராங்கனைகளின் பெயர்களை ஐ.சி.சி. பரிந்துரைத்திருந்தது.

அதில், சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் இந்திய தொடக்க ஆட்டக்காரர் சுப்மன் கில், அவுஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் சுமித் மற்றும் நியூசிலாந்தின் கிளென் பிலிப்ஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். இதில், சிறந்த வீரராக சுப்மன் கில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று, சிறந்த வீராங்கனை விருதுக்கான பரிந்துரை பட்டியலில் அலனா கிங் (அவுஸ்திரேலியா), திபாட்சா புத்தவோங் (தாய்லாந்து) மற்றும் அன்னாபெல் சதர்லேண்ட் (அவுஸ்திரேலியா) ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். இவர்களில் பெப்ரவரி மாதத்துக்கான சிறந்த வீராங்கனையாக அலனா கிங் தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் அரசு...

மறுதலித்துள்ளனர்.

தமிழ் மக்களின் நீண்டகால பாரம்பரியக் கட்சியாக இருக்கின்ற இந்தத் தமிழ் அரசுக் கட்சியை எப்படியாவது உடைத்துவிட வேண்டுமென விஷமத்தனமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் கடந்த 75 வருடகால வரலாற்றில் சோரம்போகாத - ஊழலில் ஈடுபடாத - தமிழ் மக்களின் பாரம்பரிய கட்சியாக இந்தக் கட்சியே திகழ்ந்து வருகிறது. இத்தகைய கட்சியை உடைக்க பலரும் பல சந்தர்ப்பங்களில் முயற்சி செய்திருந்தாலும் இது பலனளிக்காத நிலைமையே ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமையில் ஜனநாயக தமிழ் அரசு என்றும் புதிய தமிழ் அரசு என்றும் புதிய புதிய பெயர்களைச் சொல்லிக் கொள்கின்றனர். அவ்வாறாக தமிழ் அரசை உடைப்பவர்களுக்கு தமிழ் அரசு என்ற சொல்லும் தேவைப்படுவது ஆச்சரியமானது.

ஆக மொத்தத்தில் தமிழ் அரசை உடைக்கும் முயற்சி ஒருபோதும் நிறைவேறாது. ஆனாலும், தெற்கின் - சிங்கள நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் உடைக்கும் முயற்சியை தொடர்ந்து செய்தாலும் இது பலனளிக்காது என்பதையும் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

மேலும், தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவராக நானும் பதில் செயலாளராக சுமந்திரனும் பதவிக்கு வருவதற்கு புதிதாக ஒன்றும் செய்யவில்லலை. யாப்பில் குளறுபடி செய்து இந்தப் பதவிகளுக்கு வரவில்லை. எமது கட்சியின் யாப்புக்கு அமையவேதான் இப்போது அந்தப் பதவிகளை எடுத்திருக்கிறோம் - என்றார். (ஐ)

## 2029...

பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நேற்று அமைப்பாளர்களை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவோம். சிறந்த தரப்பினரை வேட்பாளர்களாகக் களமிறக்குவோம். வேட்புமனு தாக்கலின் பின்னர் நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்றதை போன்று இம்முறையும் அமோக வெற்றி பெறுவோம். தேசிய மக்கள் சக்தியின் பொய் வாக்குறுதிகள் மற்றும் வெறுப்பை நாட்டு மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அரசாங்கம் நிச்சயம் பின்னடைவை எதிர்கொள்ளும் என்பதை உறுதியாகக் குறிப்பிட முடியும். கொழும்பு உட்பட முக்கிய பிரதேச சபைகளை நாங்கள் கைப்பற்றுவோம். 2029ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் பிரதான அரசி யல் கட்சியாக பொதுஜன பெர முன பல மடையும். அடுத்த ஜனாதிபதித் தேர்தல் ஊடாக மீண்டும் ஆட்சியைக் கைப்பற்று வோம்.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வருவதற்கு முன்னரும் - ஆட்சிக்கு வந்த பின்னரும் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் நிறைவேற்றவில்லை. மாறாக இன்றும் போலியான குற்றச்சாட்டுகளை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருக்கிறது.

நடைபெற்று முடிந்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். தேசிய மக்கள் சக்தி மக்களை தவறாக வழிநடத்தியது. இதற்கு மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் - என்றார். (ஐ)

## மருத்துவர்களின்...

இந்த நிலையில், வன்புணர்வு குற்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்ட நிலையில், மருத்துவமனையின் பாது காப்பை அதிகரிக்க வலியுறுத்தி வேலை நிறுத்தப் போராட்டம் இன்று வெள்ளிக்கிழமை வரை தொடரும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், வட மத்திய மாகாண ஆளுநர் வசந்த ஜினதாஸவுடன் நேற்று நடந்த பேச்சுகளைத் தொடர்ந்து நேற்று காலையுடன் மருத்துவர்களின் போராட்டம் நிறைவுக்கு வந்தது. (ஐ)

## கச்சதீவு...

நடைபெறும். கூட்டுப் பிரார்த்தனைக்கு பிறகு கொடியிறக்கம் நடைபெற்று திருவிழா நிறைவுறும்

இந்தத் திருவிழாவில் இலங்கை, இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து சுமார் 8 ஆயிரம் பக்தர்கள் பங்கேற்பார்கள் என்று கருதப்படுகிறது.

கச்சதீவுக்கு செல்பவர்களுக்கு போக்குவரத்து மற்றும் உணவு, தண்ணீர் மருத்துவம் மற்றும் அடிப்படை வசதிகள் கடற்படையின் சார்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்ட செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## அ'புரம்...

முடித்துக்கொண்டு, ருவன்வெலி சாயாவுக்கு சென்று பிரார்த்தனை செய்துவிட்டு மாலை 6. 30 மணியளவில் முச்சக்கர வண்டியில் விடுதிக்கு திரும்பினேன்.

“எனது அறைக்குள் நுழைய கதவைத் திறந்தபோது, எனக்குப் பின்னால் யாரோ இருப்பதை உணர்ந்தேன். சாய்ந்து நின்ற ஒருவர் எனது கழுத்தில் கத்தியை வைத்து, மற்றொரு கையால் எனது வாயைப் பொத்தி, கத்தவேண்டாம் என்று கூறியதுடன் கதவை திறக்கச் சொன்னார், நான் பயந்து போய் கதவைத் திறந்ததும் அறைக்குள் என்னை தள்ளினார்.

என் கைபேசியிலிருந்து கடவுச் சொல்லை அகற்றச் சொன்னவர் அதில், ஹிந்தி பாடல்களை ஒலிக்க செய்தார். அறை முழுவதும் மின்குமிழ்களை ஒளிர செய்து பார்வையிட்ட பின்னர், அவ்றை அணைத்துவிட்டு குளியலறை மின்குமிழை மட்டும் ஒளிரவிட்டார்.

பின்னர், “நான் இராணுவத்திலிருந்து தப்பியுள்ளேன். பொலிஸ் என்னைத் தேடுகிறது. சிறிதுநேரம் இருந்துவிட்டு அப்புறம் போய் விடுவேன். உன்னை எதுவும் செய்யமாட்டேன். சத்தம் போடாதே. நீ சத்தம் போட்டால் உன் கழுத்தை அறுத்துடுவேன். அது எனக்குப் பெரிய பிரச்னை இல்லை”, என்று மிரட்டினார்.

“ஒரு கட்டத்தில், நான் அந்த நபரை அவர் வைத்திருந்த கத்தியால் குத்த முயன்றேன். என் கை வெட்டப்பட்டது. நான் அவரை கத்தியால் குத்த முயன்றபோது, அந்த நபர் மிகவும் கோபமடைந்தார். பின்னர் நான் கொல்லப்படுவேன் என்று பயந்தேன்.”

“சம்பவத்துக்குப் பிறகு, சந்தேக நபர் சென்றதும், “நான் உனது போனை எடுத்துக் கொண்டு போகிறேன். இனிமேல், இது கிடைக்காது. நான் எல்லாவற்றையும் போட்டோ எடுத்துள்ளேன். யாரிடமும் சொல்லாதே. சொன்னால், உனக்குதான் பிரச்னைதான் வரும் - மன்னிக்கவும்.” என்று கூறினார்

வன்கொடுமையின் பின்னர் எனது கட்டுகளை நானே அவிழ்த்துவிட்டு அநுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு சென்று நான் பணிபுரிந்த நோயாளர் விடுதியிலுள்ள மருத்துவரிடம் சம்பவம் குறித்து தெரிவித்தேன்.

பின்னர், எனது தந்தைக்கும், வெளி மாவட்டத்தில் உள்ள மருத்துவமனையில் பணிபுரியும் எனது நெருங்கிய நண்பருக்கும் அந்த மருத்துவரின் கைபேசி மூலம் தகவல் அளித்தேன்.

இந்தக் குற்றத்தைச் செய்த நபரை மீண்டும் பார்த்தால் அடையாளம் காண முடியும் - என்றும் பெண் மருத்துவர் தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# உலகின் குடும்ப நட்பு நாடுகள் முதலிடம் பிடித்தது இலங்கை!

கொழும்பு, மார்ச் 14

குடும்ப நட்பு மிகுந்த நாடுகளில் இலங்கை முதலிடத்தைப் பிடித்துள்ளது. கொண்டேநாட்ஸ் ட்ரவலர் என்ற சஞ்சிகை 2025ஆம் ஆண்டுக்கான குடும்ப நட்பு மிகுந்த நாடுகளின் பட்டியலை வெளியிட்டுள்ளது.

இதில், இலங்கை முதலிடத்தையும் அடுத்த இடங்களில் சுவீடன், நோர்வே, நியூசிலாந்து, ஐஸ்லாந்து, ஜேர்மனி, பின்லாந்து, டென்மார்க், அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகள் அடுத்த இடங்களை பிடித்துள்ளன.

சுகாதார தரம், பொருளாதார வலிமை, பாதுகாப்பு அளவீடுகள், டிஜிற்றல் இணைப்பு என 24 விடயங்களை அடிப்படையாகக் கொண்டு 82 நாடுகளை தரவரிசைப்படுத்தி புள்ளிகளின் அடிப்படையில் இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் கல்வியின் தரம் மற்றும் கல்வியை பெற்றுக்கொள்ளுதல் போன்ற தரவுப் புள்ளிகளை கொண்டு ஒரு நாடு எவ்வளவு குடும்ப நட்புடன் உள்ளது என்பது கணிக்கப்படுகிறது. இலங்கை அதன் கல்வி முறைமையால் ஈர்க்கப்பட்டு முதலிடத்தைப் பெற்றுள்ளது. (ஐ)

# சிவனொளிபாதமலை யாத்திரையில் 14 பேர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, மார்ச் 14

பல்வேறு வகையான போதைப் பொருட்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் சிவனொளிபாதமலை யாத்திரையில் கலந்து கொண்டிருந்த 14 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹற்றன் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள 14 சந்தேக நபர்களும், 25 முதல் 35 வயதிற்கு இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர்களை ஹற்றன் நீதவான் முன்னிலையில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மேயர் வேட்பாளரை ஆதரிக்க தயார்!

## ஐக்கிய தேசியக் கட்சி

கொழும்பு, மார்ச் 14

ஐக்கிய மக்கள் சக்தி எம்முடன் இணைந்து பயணிப்பதற்கு இணக்கம் வெளிட்டால் அதன் கொழும்பு மேயர் வேட்பாளரை ஆதரிப்பதற்கு தயாராக உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இதுகுறித்து தெரியவருபவரை வருமாறு,

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்பமனு தாக்கல் எதிர்வரும் 17ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது. எவ்வாறிருப்பினும் தேசிய மக்கள் சக்தி மாத்திரமே கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளரை அறிவித்துள்ளது.

ஏனைய பிரதான கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி மற்றும் பொதுஜன பெரமுன உள்ளிட்டவை இது குறித்து உத்தியோகபூர்வமாக எந்த அறிவிப்பையும் வெளியிடவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்னவை களமிறக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹிருணிகா பிரேமசந்திரவின் பெயரும் முன்மொழியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அதனை தான் ஏற்கப் போவதில்லையென ஹிருணிகா கடந்த வாரம் பகிரங்கமாக அறிவித்தார்.

இந்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியிலுள்ள சகல தொகுதிகளிலும் இணைந்து களமிறங்கா விட்டாலும், கொழும்பு மாநகர சபை உள்ளிட்ட முக்கிய தொகுதிகளில் இணைந்து களமிறங்குவதற்கான யோசனையை ஐக்கிய தேசிய கட்சி ஐக்கிய மக்கள் சக்தியிடம் முன்வைத்துள்ளது.

இது குறித்த பேச்சுகளும் இரு கட்சிகளினதும் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கிடையில் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில் இந்த யோசனைக்கு ஐக்கிய மக்கள் சக்தி இணக்கம் தெரிவிக்கும்பட்சத்தில், அக்கட்சி முன்னிலைப்படுத்தும் மேயர் வேட்பாளருக்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதற்கு ஐக்கிய தேசிய கட்சி தீர்மானித்துள்ளது.

20ஆம் திகதி வேட்புமனு தாக்கல் நிறைவடையவுள்ள நிலையில், அன்றைதினம் வரை இந்த யோசனை குறித்து சிந்திப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு ஐ. தே. க. கால அவகாசம் வழங்கியுள்ளது.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியிடமிருந்து சாதகமான பதில் கிடைக்காத பட்சத்தில் 20ஆம் திகதி தமது மேயர் வேட்பாளர் யார் என்பதை அறிவிப்போம் என ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது. அதற்கு பொருத்தமான ஒருவர் தயார் நிலையிலேயே உள்ளாரென ஐ. தே. க. தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு மாநகர சபையில் மாத்திரமின்றி ஏனைய தொகுதிகளிலும் இணைந்து போட்டியிட ஐக்கிய மக்கள் சக்தி விரும்பினால் அதனை ஏற்றுக் கொள்ளவும் தாம் தயார் என்றும் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார். (ஐ)

## சிறைச்சாலை...

பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னிலங்கையில் தொடர் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களையடுத்து நிலைமையை கட்டுப்படுத்த நடவடிக் கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் இந்தத் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பிரபல...

பயன்படுத்தியே அவர் வன்புணர்ந்தார் எனவும் விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும், சந்தேகநபரிடம் விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## 50,000...

இந்தியா வழங்கியது. 2021 ஜன வரியில் 5 இலட்சம் கொவிஷீல்ட் தடுப் பூசிகள், 2022இல் அன்ரிஜென் சோதனை கருவிகளை வழங்கியது. மேலும், 2022 இல் 100 கோடி அமெரிக்க டொலர்களையும் கடன் வசதியையும் வழங்கியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## பாடசாலை நிகழ்வுகளில் அரசியல்வாதிகளுக்கு தடை?

### பிரதமரால் எழுந்துள்ள சர்ச்சை

கொழும்பு, மார்ச் 14

பாடசாலை நிகழ்வுகளில் அரசியல்வாதிகளை பங்கேற்க அழைக்கவேண்டாம் என்று கல்வி அதிகாரிகளுக்கு அறிவுறுத்திய தனது முந்தைய அறிக்கையிலிருந்து பிரதமர் ஹரிணி அமரசூரிய பின்வாங்கியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றிய பிரதமர் அது போன்ற எந்த விதியும் விதிக்கப்படவில்லை என்று குறிப்பிட்ட அவர், ஆனால், பாடசாலை அமைப்புகளை அரசியலுக்குப் பயன்படுத்தக்கூடாது என்று வலியுறுத்தினார்.

கல்வி அமைச்சராக பிரதமர் விதித்ததாகக் கூறப்படும் தடை இருந்தபோதிலும், அரச பாராளுமன்ற உறுப்பினர்கள் பாடசாலை நிகழ்வுகளில் எவ்வாறு கலந்து கொள்கிறார்கள் என்று, எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக கேள்வி எழுப்பிய போதே, ஹரிணி, தமது நிலைப்பாட்டை வெளியிட்டார்.

இதற்கு பதிலளித்த பிரதமர்,அத்தகைய தடை எதுவும் இல்லை எனவும் முன்னர் தாம் வெளியிட்ட கருத்தை, ஊடகங்கள் தவறாக அறிக்கையிட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டினார். (அ)

## கண்டியில் சந்தேகத்துக்கிடமான முறையில் இளம் பிக்கு உயிரிழப்பு!

கொழும்பு, மார்ச் 14

கண்டியில் சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த 27 வயது புத்த துறவியின் மரணம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கண்டியில் உள்ள உடஹுல்வல பகுதியில் உள்ள ஆரண்ய சேனாசனத்தில் புத்த துறவி ஒருவர் சந்தேகத்திற்கிடமான முறையில் இறந்துள்ளார்.

ஆரண்ய சேனாசனத்தில் தனியாக வசித்து வந்த குறித்த புத்த துறவி அவரது படுக்கையில் இறந்த நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், சம்பவம் நடந்த நேரத்தில், சேனாசனத்தின் தலைமைத் துறவி, அவிசாவளைப் பகுதிக்கு கற்பிப்பதற்காக சென்றுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்த ஆரம்ப விசாரணைகளில் மரணத்துக்கான காரணம் குறித்து எந்த விவரங்களும் வெளியாகவில்லை. (அ)

## தேசபந்து தென்னக்கோன் மிகவிரைவில் கைதாவார்!

### கூறுகிறது அரசாங்கம்



கொழும்பு, மார்ச் 14

தற்போது தலைமறைவாக உள்ள முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேச பந்து தென்னக்கோன் விரை வில் நீதியின் முன் நிறுத்தப்படுவார் என்று கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சர் பேராசிரியர் உபாலி பன்னிலகே நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து தெரிவித்த அவர் இதனை குறிப்பிட்டார்.தேசபந்து தென்னக்கோனை கைது செய்ய பல குழுக்கள் விசா ரணைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

மேலும், எந்த வகையிலும், விசாரணைகளை தாமதப்படுத்த அரசாங்கம் எந்த விருப்பமும் கொண்டிருக்கவில்லை என்று அமைச்சர் உபாலி பன்னிலகே சுட்டிக்காட்டினார்.

சட்டத்திற்கு பயந்து தேசபந்து தென்னக்கோன் மறைந்திருப்பது ஒரு சோகமான சம்பவம் எனவும், அவரை கைது செய்வதற்கான அனைத்து நடவடிக்கைகளும் தற்போது எடுக்கப்பட்டு வருவதாக அமைச்சர் கூறினார். (அ)

# தேர்தல் சட்டத்துக்கமைவாக இல்லாத வேட்புமனுக்கள் நிராகரிக்கப்படலாம்!

### தேர்தல்கள் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 14

**உள்ளூராட்சிமன்றத் தேர்தல் சட்டத்துக்கமைய தாக்கல் செய்யப்படாத வேட்புமனுக்கள் நிராகரிக்கப் படக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதால் அது தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்-19ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் கட்டுப்பணம் செலுத்தும் காலம் நிறைவடையவுள்ளது. தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வேட்புமனுக்களை இரத்து செய்வது எமது நோக்கமல்ல. தேர்தலில் போட்டியிட விரும்பும் அனைவருக்கும் அதற்கான வாய்ப்பளிக்கப்பட வேண்டுமெனில் வேட்மனுக்கள் அதற்கேற்றவாறு தவறுகள் இன்றி சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அதேபோன்று 25 சதவீத பெண் பிரதிநிதித்துவம், 25 சதவீத இளைஞர் பிரதிநிதித்துவம் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று வேட்பாளர்களின் சொத்து மதிப்பு விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியது கட்டாயமாகும். இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்துமாறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (அ)

## பாதுகாப்பை உறுதிப்படுத்த கோரி கிராம அலுவலர்களும் போராட்டம்!

கொழும்பு, மார்ச் 14

கிராம உத்தியோகத்தர்களும் பல்வேறு சமயங்களில் விபத்துக்களை எதிர்நோக்க நேரிட்டுள்ள நிலையில் தமக்கு தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு கோரி நேற்று முதல் தொழில் நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களினால் இந்த தொழில்சார் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், ஏனைய சங்கங்களின் பிரதிநிதிகளும் இதற்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதாகவும் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்தார்.

கிராம உத்தியோகத்தர்களில் அறுபது வீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் எனவும், பெரும்பாலான கிராம உத்தியோகத்தர்களின் அலுவலகங்கள் தனிமைப் படுத்தப்பட்ட அல்லது மக்கள் நடமாட்டம் இல்லாத பிரதேசங்களில் அமைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதன் காரணமாக பெண் உத்தியோகத்தர்களின் பாதுகாப்புக்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு கேட்டுக்கொண்ட அவர், நேற்று முதல் இரவு நேர அனர்த்தங்கள், உயிரிழப்புகள் உட்பட சகல கடமைகளில் இருந்தும் விலகிக் கொள்வதாக தெரிவித்தார். (அ)

## தேங்காய் திருடுவதற்கு சென்ற இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, மார்ச் 14

குருநாகல் - உஹுமீய பகுதியில் தேங்காய் திருடச் சென்ற இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சம்பவமானது நேற்று முன் தினம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவத்தில் குருணாகல்- வாரியபொல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே காயமடைந்துள்ளார்.

இந்த இளைஞன் உஹுமீய பிரதேசத்திலுள்ள தென்னந்தோப்பு ஒன்றிற்குள் சென்று தேங்காய் திருட முயன்றுள்ளார்.

இதன்போது தென்னந்தோப்பின் உரிமையாளர் இளைஞன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த இளைஞன் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான தென்னந்தோப்பின் உரிமையாளர் 12 ரக போர் துப்பாக்கியுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வீரம்புகெதர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# குரங்கு பிடித்தால் ரொக்கப் பணம்! அரசிடம் முன்மொழிந்த எதிர்க்கட்சி

கொழும்பு, மார்ச் 14

விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதத்திற்கு தீர்வாக டோக் குரங்குகளைப் பிடிக்கும், பொது மக்களுக்கு குறைந்தபட்சம் 500 அல்லது 1,000 ரூபாய் ரொக்கமாக வழங்க வேண்டும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுஜித் சஞ்சய பெரேரா அரசாங்கத்திடம் முன்மொழிந்தார்.

கணக்கெடுப்பை காட்டிலும் இது சிறந்த வழி என்று அவர் பாராளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-விலங்குகளால் ஏற்படும் சேதத்தின் பெறுமதியை கருத்தில் கொள்ளும் போது, இதற்காக சிறிது பணத்தைச் செலவிடுவது பெரிய பிரச்னை அல்ல.

பேராதனை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த சில நிபுணர்கள் 2015 ஆம் ஆண்டில் அப்போதைய அரசாங்கத்திற்கு குரங்குகளை கருத்தடை செய்யவோ அல்லது டோக் குரங்குகளை பொருத்தமான இடத்தில் அடைத்து வைக்கவோ முன்மொழிந்தனர்.

எனினும், அதிக செலவுகள் காரணமாக அந்த திட்டங்கள் செயற்படுத்தப்படவில்லை.

தற்போதைய அரசாங்கத்தால் இந்தப் பிரச்னைக்கு நீடித்த தீர்வைக் காண முடிந்தால், அதிக செலவுகள் என்ற பிரச்னை தொடராது-என்றார். (அ)

## ஹோமாகமவில் உள்ள மான்களை வேறு இடங்களுக்கு மாற்ற திட்டம்!

கொழும்பு, மார்ச் 14

ஹோமாகம பகுதியில் மான்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், பொருத்த மான பகுதிக்கு மான்களை விடுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளதாகத் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அருண பனாகொட தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் காரண மாக விவசாயிகளின் பயிர்ச்செய்கை நட வடிக்கைக ளுக்கு பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக வும் அவர் கூறி னார். (அ)



## சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிப்பு!

கொழும்பு, மார்ச் 14

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 563,427 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, இந்த மாதத்தின் கடந்த 9 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மாத்திரம் 70,449 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இந்தியாவிலிருந்து நாட்டுக்குப் பிரவேசித்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 10,523 ஆகப் பதிவாகியுள்ளதுடன் ரஷ்யாவில் இருந்து 9,475 பேரும், ஜேர்மனியில் இருந்து 6,626 பேரும், பிரித்தானியாவில் இருந்து 6,580 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org